# ஜீவ மன்னா



JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

## அனுதினமும்

**2013 ஜூன்**

குயவன் வனைந்துகொண்டிருந்த
மண்பாண்டம் அவன் கையிலே
கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத்
திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன்
பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி
குயவன் அதைத் திரும்ப
வேறேபாண்டமாக வனைந்தான்.

எரேமியா 18:4

**எங்கள் வாழ்க்கையை மீண்டும்
இவ்வண்ணமாக வனைவதற்கு
தேவன் வல்லமையானவர்!!!**

# உலகெங்கும் வாழ்கின்ற என் பிரியமான இலங்கைச் சகோதர சகோதரிகளே!

## எங்களுடைய தேவ ஆராதனைகளை www.jesusnf.org

## நேரலை ஒளிபரப்பினை நேரடியாகக் காண்பதற்கு...

## எங்களுடைய வெப் ஒளிப்பரப்புக்குள் பிரவேசியுங்கள் !

**பிரியமானவர்களே,**

எங்களுடைய தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபமாயிருக்கிறபடியால் ஆத்மீக தேவ பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய ராஜ்யத்தை குறித்து ஏதாவதொரு காரியத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் இயேசுகிறிஸ்து எங்களுக்கு ஜெபத்தை குறித்து கற்பிக்கும் சந்தர்ப்பத்திலே ''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக'' என்று தேவன் சொல்லியிருக்கிறார். தேவ பிள்ளைகளே, நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன?

'சிறிய' செய்கைக்கூடாக ''பெரிதானதொன்றை'' நிறைவேற்ற உங்களுக்கோர் அரிய 'சந்தர்ப்பம்' இதோ!

(1) எங்களுடைய *jesusnf.org* வெப் ஒளிபரப்பு நிகழ்ச்சியின் மூலம் இலங்கையின் நேரத்தில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை ஒவ்வொரு சனிக்கிழமை தினங்களில் நடைபெறுகின்ற விஷேசித்த அற்புத சுகமளிக்கும் ஆராதனை **Justin tv** ஒளிபரப்பு நிகழ்ச்சியின் மூலம் நீங்கள் உலகில் எந்த நாட்டில் இருந்தாலும் நேரடி ஒளிப்பரப்பினை கண்டுகளிக்கக் கூடியதாகவுள்ளது. 'சுவிஷேசத்தை' அறிவிக்கும் ஊழியமாக கருத்திற் கொண்டு இந்த நேரடி நிகழ்ச்சியினை அநேகருக்கு அறிமுகப்படுத்தி ஒரு நற்செய்தி ஊழியத்தில் நீங்களும் பங்கு பெறலாம். இதற்காக எதையும் விரயமாக்க வேண்டிய அவசியமில்லை. இதன் மூலம் இன்னும் அநேகருக்கு சுவிஷேசத்தை அறிவித்து ஒத்தாசைகளை வழங்க முடியும்.

(2) எங்களிடத்தில் சிறிய 'துண்டுப்பிரதிகள்' இருக்கின்றது. அவைகளைப் பெற்றுக் கொண்டு அதன் மூலமாக அநேக 'பாவிகளை' இரட்சிப்புக்குள் கொண்டு வருவதற்கு ஒத்துழைக்க முடியும்.

(3) ''ஜீவ மன்னா தின சஞ்சிகை'' மூலமாக புதியவர்களுக்கு சுவிஷேசத்தை அறிமுகப்படுத்த உங்களால் முடியும்.

(4) அநேக சாட்சிகளோடு ''சுவிஷேச CD'' யை எங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு புதியவர்களுக்கு கொடுப்பீர்களென்றால் அதுவே மிகச் சிறந்த ஊழியமாக இருக்கின்றது.

பிரியமானவர்களே, இந்த உலகத்தின் மிக அவசியமாக கிடைத்த கால நேரங்களில் ஒரு மணித்தியாலம் எனினும் நீங்கள் வீண் விரயமாக செலவழிக்காதபடி தேவன் உங்களுக்குக் கொடுத்ததான சந்தர்ப்பங்களை முடிந்தளவு பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ள காரணங்கள் நான்கில் ஒன்றிரண்டையோ அல்லது அதற்கு மேலாகவோ தாமதிக்காமல் நிறைவேற்றுங்கள். உங்களுடைய தேவனாகிய இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பார்.

***இயேசு துணை!***

# சர்வ வல்லவரான தேவ பிதாவானவருக்கே



## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

***ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி இயேசுவுக்காகத் தீவிரமாக செயல்படுங்கள்!***

ஜீவ மன்னா 21வது வெளியீடு தேவனின் முடிவில்லா இரக்கத்தினாலும், அவரின் விஷேசித்த கிருபையினாலும், அவரின் பலத்த கரக்கிரியைகளுக் கூடாக உங்கள் கரங்களுக்குக் கிடைக்கச் செய்தமைக்காக இவ்வுரையின் முதற்கண் எனது எண்ணிலடங்காத ஸ்தோத்திரங்களைச் செலுத்துகின்றேன். ஜீவ மன்னா சம்பந்தமான விமர்சனக் கடிதங்கள் அதிகமான அளவில் எமக்குக் கிடைக்கின்றன. ஆசிரியரான எனக்கும் எனது ஊழியத்தில் கடமைபுரியம் ஊழியர்களுக்கும் வாசகர்கள் அவர்களது பெருந்தன்மையான உள்ளத்தில் நன்றி கூறியும் வாழ்த்தியும் எழுதியுள்ளார்கள். இப்படியாக விமர்சனக் கடிதங்களுக்கூடாக எங்களை உற்சாகப்படுத்துகின்ற அனைவருக்கும் நாம் முழு உள்ளத்தோடு நன்றி கூறுகின்றோம்.

ஆசிரியர் உரையில் மிகவும் விஷேசித்த காரியமொன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நான் கடந்த மாதம் இஸ்ரவேல் தேசத்திற்குச் சென்றிருந்தேன். நான் அங்கு நிறைய இடங்களைத் தரிசிக்கச் சென்றேன். எனது “இயேசு அப்பா” வாழ்ந்த இடங்கள் என்ற உள்ளுணர்வு எனக்குள் மேலெழுந்துக் கொண்டு புத்துணர்ச்சியை உருவாக்கியது. ஆனாலும் அதே வேளை இயேசுவின் ஜீவனுள்ள வசனங்கள் அங்கு காணப்படாமை ஒரு புறம் வேதனையைக் கொடுத்தது. இஸ்ரவேலில் ஆவிக்குரிய காரியங்கள், பெருகிட அத்தோடு சமாதானத்திற்கேற்ற சூழ்நிலைகள் உருவாக தின ஜெபங்களின் போது ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு ஆவிக்குரிய மன்னா தின தியானங்களை வாசிக்கும் வாசகப் பிள்ளைகளாகிய நீங்கள் என்ன செய்ய வேண்டுமென சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். எங்கள் சொந்த காரியங்களைக் குறித்து மாத்திரம் சிந்தித்து செயலாற்றுவதோடு நிறுத்திவிடாமல் தேவ ராஜயத்தைக் குறித்து அதி தீவிரமாக செயல்படுங்கள்.

உங்களுக்கு கிடைக்கின்ற இந்த ஜீவ மன்னா தின தியானங்களை நீங்கள் வாசிப்பதோடு நிறுத்திவிடாது இன்னொருவருக்கும் கொடுங்கள். முடிந்த அளவு புது முகவரிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் அந்த முகவரிக்குரியவர்களுக்கு தபால் மூலம் கிடைக்கச் செய்வோம். அன்று இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலத்தில் மகிமையடைந்திருந்த எருசலேம் இன்று பாழடைந்து காணப்படுகின்றது. இயேசுவின் அன்பை ருசி பார்த்து அவருடைய வசனங்களை ஆகாரமாக உட்கொள்ளும் நாம் பெற்ற இந்த சந்தோஷம் சமாதானம் சுகம் அனைத்தையும் இலங்கை வாழ் அனைத்து ஜனங்களுக்கும் முடிந்தளவு பெற்றுக் கொடுக்க பாடுபடுவோமாக! இந்த தேவ ராஜ்யத்தின் சுவிஷேசம் அறிவிக்க உங்கள் முழு அவதானத்தையும் செலுத்தி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்களா! இயேசுவின் அநுக்கிரகம் உங்களோடு இருப்பதாக.

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவிற்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**பாழடைந்த எருசலேம்
பன்மடங்கு மகிமையடைய
மனப்பூர்வமாய் ஜெபித்திடுங்கள்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

# மன்னா வாசகர்களே
# உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்

அன்பான தேவ பிள்ளைகளே,

எங்கள் ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளானது உங்களுக்கு எவ்வித குறைவுகளுமின்றி எல்லா ஆசீர்வாதங்களாலும் நிறையப் பெற்ற நல்ல நாளாக வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன். இந்த மாதத்திலும் விசேட செய்திக்கூடாக எனக்கு உங்களைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தமையால் மகிழ்ச்சியடைகிறேன்.

தேவ பிள்ளைகளே! ஜீவ மன்னா வாசகர்களில் பெரும்பாலா னோர் எங்களுக்கு விமர்சனக் கடிதங்கள் எழுத மறவாத படியால் உங்களுக்கு உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அதேபோல் வாசகக் கட்டணங்கள் குறித்தும் அநேகர் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்ற படியால் நான் நன்றி கூறுகின்றேன். உங்கள் வாசகக் கட்டணங்களை ஜீவ மன்னா தின தியானங்களின் காரியங்களுக்காக நீங்கள் கவனமாக அனுப்புகின்ற படியால் மகிழ்ச்சியடைகின்றேன். அது மட்டுமல்லாது உங்கள் அறிவாற்றலைப் பாவித்து எங்களுக்கு எழுதும் தெளிவான உரைகளைக் காண்கின்ற வேளை உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியாயிருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! இந்த ஜீவ மன்னா புத்தகம் உரிய நேரத்தில் உங்கள் கரங்களில் கிடைக்க வேண்டுமென்பதற்காக ஊழியக்காரர்கள் பெரும்பாலானோர் மிகவும் சிரமப்பட்டு முயற்சியோடு செயல்படுவதோடு, அவர்கள் வாழ்க்கை செலவுகளுக்காக ஒரளவு பணத்தையும் எதிர்ப்பார்க்கின்றார்கள். அப்படியாக ஊழியம் செய்யும் பிள்ளைகள் அவர்கள் எதிர்பார்ப்பதைப் போன்று சிக்கனமான வாழ்க்கை நடத்தும் பொருட்டு வேண்டிய பணத்தை ஒவ்வொரு கிழமையும் அவர்களுக்கு கொடுக்கின்றேன். ஆகையால் தேவ பிள்ளைகளே, ஜீவ மன்னா வாசகர்களாகிய நீங்கள் எங்கே இருந்தாலும் இவைகளைக் கருத்திற் கொண்டு உங்கள் வாசக கட்டணங்களை உரியநேரத்தில் எங்களுக்குக் கிடைக்கச் செய்யுமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !**

**மன்னா ஆசிரியர்**

போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா

ஜூன் 01

சனி

## தளராத விசுவாசம் தெய்வீக சுகத்தை பெற்றுத் தரும் !

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 21 - 22

**"இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்."** (லூக்கா 8:50)

அன்பார்ந்த என் தேவ பிள்ளைகளே, என்றும் ஜீவனுள்ளவராய் எம் மத்தியில் வாசம் பண்ணுகிறவரும். எமக்காக ஜீவனை விட்டவரும் எம்மோடிருக்கும்படிக்கு எழுந்தவருமான எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றும் ஒரு ஆசீர்வாதத்தின் நாள் உங்களுக்கு உரித்தாக வேண்டுமென வாழ்த்துகிறேன். எமது மீட்பின் கன்மலை இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரையே வழிப்படும் நீங்கள் பேறுபெற்றவர்கள். ஆகையால் எச் சூழ்நிலையிலும் எவ்விதமான சந்தர்ப்பங்களிலும் உங்கள் உள்ளத்தை மனந்தளர மனங்கலங்க இடங்கொடாதிருங்கள்.

அருமையானவர்களே, ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள இறைவனுடைய வார்த்தைகள் லூக்கா 08:50 எங்களுக்குள் காணப்படும் விசுவாசம் எமக்கு சுகத்தைப் பெற்றுத்தரும் என வெளிப்படுத்துகிறது. இவ்வார்த்தைகள் ஆலயத்லைவனாகிய யவீரு என்பவனுக்கே சொல்லப்பட்டது. யவிறு என்ற இந்த ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலே பண்ணிரண்டு வயதுள்ள அவனுடைய ஒரே குமாரத்தி மரணத்தருவாயில் இருந்தாள். அவளை குணமாக்குமாறு கேட்டுக்கொண்ட யவீருவினுடைய விண்ணப்பத்திற்கு பதில்கொடுக்கும்படி அவனுடைய வீட்டை நோக்கி இயேசு கிறிஸ்து நடந்து சென்றுக்கொண்டிருக்கையில் ஜெப ஆலயத்தலைவனுடைய மகள் இறந்து விட்டதாகவும் போதகரை அழைத்து வரவேண்டாம் என பணிவிடைக்காரன் அறிவித்தான். அதைக் கேட்ட எமது ஆண்டவர் அவனுடைய விசுவாசத்தை தளரவிடாதபடி இவ் வார்த்தைகளைச் சொன்னார். "பயப்படாதே! விசுவாசமுள்ளவனாயிரு" அப்போது அவள் இரடசிக்கப்படுவாள் என்று. அதன் பின்பு அவர் அவனுடைய வீட்டிற்கு கடந்து சென்ற வேளையில் எல்லோரும் அழுது புலம்பிக் கொண்டிருக்கையில் அதைக் கண்ட இயேசு, அழாதேயுங்கள்! அவள் மரித்துப் போகவில்லை. அவள் நித்திரையடைந்திருக்கிறாள் எனறார். அவள் மரித்துப் போனால் என அறிந்த அவர்கள் இயேசுவை நகைத்தார்கள். ஆயினும் அவர் அச்சிறுபெண்ணின் கையைப் பிடித்து பிள்ளையே, எழுந்திரு என்றார். அப்போது அவள் உயிர்ப்பிக்கப்பட்டு எழுந்திருந்தாள்.

தேவ பிள்ளைகளே, மரித்த யவீரு மகளை உயிர்ப்பெறச் செய்த இயேசுக்கிறிஸ்து இன்றும் எம் மத்தியில் அற்புதவண்ணமாக கிரியை செய்கிறவராக இருக்கிறார். நீங்களும் விசுவாசித்தால் உங்களுக்கும் அற்புதம் செய்வார். உங்கள் விசுவாசத்தை பெருகச் செய்து அதிகரிக்கச் செய்யுங்கள். அவரின் அற்புதக் கிரியைகளைக் கண்டும் கேட்டும் அநேக புத்தங்கள் மூலம் வாசித்து அறிந்து, விசுவாசியுங்கள். சாத்தானுக்கு உங்களுடைய விசுவாசத்தை சீர்குலைத்து அநேக அவிசுவாசமான காரியங்களுக்கு இடமளிக்காதிருங்கள்.யவிறுவின் விசுவாசம் மகளை உயிர்ப்பிக்கச் செய்தது. அதேபோல் உங்கள் விசுவாசம் உங்கள் குடும்பத்திற்கு இரட்சிப்பை சுகத்தை ஆசீர்வாதத்தை விடுதலையைப் பெற்றுத்தரும் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளின் நிமித்தமாகவே ஆத்துமா சோர்வடைந்திருந்தாலும் மனங்கலங்கி. பயப்படாதிருங்கள். எச் சூழ்நிலையானாலும் அவைகளை பார்த்து மனந்தளர்ந்துவிடாதபடி இயேசுவின் வல்லமையிலே விசுவாசத்திலே மாத்திரம் நிலைத்து எதிர்பார்த்து விசுவாசத்தோடு கேட்கும் போது அற்புதங்களைக் காணுவீர்கள். உங்கள் விசுவாசத்தால் குணமடைவீர்கள். தெய்வீக சுகம் ஆத்மீக விடுதலையைப் பெற்றுக் கொள்வீர்கள். இன்றைய நாள் விடுதலையின் நாள்!



விசுவாசத்தை ஆரம்பிக்கிறவரும் முடிக்கிறவருமானவரே! விசுவாசத்தால் யாவற்றையும் பெற்றுக் கொள்ளும்படி எனக்கு அநுக்கிரகம் செய்பவரே! விசுவாசத்தால் சுகத்தைப் பெற்றுக்கொள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள என் விசுவாசத்தை அதிகரித்து பலுகிப்பெருக உங்கள் பெலத்தை தந்து அநுக்கிரகம் தாரும் தேவனே. ~ஆமென்~

அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல,
கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. யாக்கோபு 2:26

ஜீவ மன்னா

ஜூன் 02

ஞாயிறு

## சகலவற்றையும் அழகாக சிருஷ்டிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 23 - 24

**"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது;..."** (ஆதியாகமம் 1:31)

தேவ கிருபை பெற்றவர்களே, இயேசுக்கிறிஸ்துவின் ஈடுயிணையில்லா இனிய நாமத்தினால் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். தேவனால் படைக்கப்பட்ட சகல நாட்களும் நன்மைக்கேதுவானதாக இருப்பதால் தேவனை ஸ்தோத்தரிப்போம். கர்த்தராகிய தேவன் ஆறுநாட்கள் வானம், பூமி, காண்பவை, காணாதவைகள் யாவையும் படைத்து விட்டு. ஏழாம் நாளிலே தம்முடைய கிரியைகளையெல்லாம் நிறைவேற்றி ஓய்ந்திருந்தார். அவரால் சிருஷ்டிக்கப்பட்ட யாவும் மிகவும் நன்றாயிருந்தது. அதேபோல் எல்லா தினங்களும் நன்மையானதே என்று கருத்திற் கொள்ளுங்கள்.

பிரியமானவர்களே, இன்றைய தின இதழில் ஆரம்ப வசனம் ஆதியாகமம் 1:31 வசனத்தின் பிரகாரம் தான் சிருஷ்டித்த சகலவற்றையும் ஒவ்வொன்றாய் உற்றுநோக்கிப் பார்த்த தேவன் எல்லாம் நன்றாக இருக்கிறது, என திருப்தியடைந்தார். ஆகையால் தேவன் படைப்பவர், உருவாக்கிறவர் மாத்திரமல்ல சகலவற்றையும் நன்றாக அழகாக எவ்வித குறைவுமின்றி பார்த்து பார்த்து நேர்த்தியாக சிருஷ்டிக்கும் தேவனாயிருக்கிறார். அவருடைய படைப்பு மிக அழகுள்ளதாகவும் நன்மைகள் நிறைந்ததாகவும் இருக்கிறது. ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! ஒரு சிறு கர்ப்பப்பையில் ஒரு சிறு கருவினுள் இவ்வளவு பெரிய உருவத்தை எப்படி அழகாக சிருஷ்டிக்கிறார். கண், காது, மூக்கு போன்ற வெளி அவயவங்கள் யாவும் சரீரங்களிலே இயங்கச் செய்கிற, உயிர் வாழச் செய்கிற சகல அவயங்களையும் உருவாக்கி உயிரைடையச் செய்து சுவாசத்தைக் கொடுத்து இம் மண்ணில் பிறக்கும்படி செய்வது எவ்வளவு அதிசயமான அற்புதமான அழகான நன்மையான காரியம் என்பதை சிந்தித்துப் பார்ப்போம். இலங்கை வாழ் ஜனங்களின் மத்தியில் எம்மை அவரது சொந்தப் பிள்ளையாக மாற்றி எம்மை இரட்சித்து பரிசுத்த ஆவியினால் எம்மை நிரப்பி இப்புவியில் உலக லௌகீக காரியங்களுக்கு அடிமைகளாகி துன்மார்க்கமாக ஜீவித்த எங்களை ஆவிக்குரிய வாழ்வை கொடுத்து எம்மை பரிசுத்த வாழ்விற்கு வழிவகுத்து இந்த நித்திய ஜீவனுக்குரிய வழிகளில் பெலப்படுத்தி, அநேக அறிவுரைகளோடும் அன்பினாலும் நாள்தோறும் புதிய கிருபையோடு எம்மை வழி நடத்துகிறார். அவருடைய ஒவ்வொரு காரியமும் அழகுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைந்து காணப்படுகிறது. மனிதர்களின் ஜீவியத்தைக் குறித்து அவருடைய சித்தம் எவ்வளவு நன்றாக இருக்கின்றதோ அதேபோல் எம் மரணத்தின் பின் எமக்கு ஆயத்தப்படுத்தின அவருடைய திட்டங்களும் அழகானதும் நன்மையுமாக இருக்கின்றது. எமது ஆத்துமாவைக் காத்தவர் அவரது வார்த்தையின்படி ஜீவித்தவர்களுக்கு எமது வயோதிப வாழ்க்கையின் முடிவும் மிக அழகானதாக அமைவதோடு அவர் அருளும் பரலோக வாழ்வு சதாகாலமும் மகிழ்ச்சியும் ஜீவகிரீடமான அதிசயமான அழகும் நேர்த்தியுமானது.

தேவ பிள்ளைகளே, எதைக் குறித்தும் கவலைப்படாதிருங்கள். எமக்கு ஆத்துமீக வாழ்வை கொடுத்தவர் நம்மை வழிநடத்தும்படி எம்மோடிருக்கிறார். இன்ப துன்ப வேளைகளில் எல்லாம் உங்களை வெற்றியோடு முன் நோக்கிச் நடத்திச் சென்று முடிவில் விலைமதிப்பற்ற பரிசுப் பொருளை பெற்றுக்கொள்ள ஒத்தாசை செய்கிறார். மகிமையின் கிரீடத்தை நாம் உரிமையாக்கிக் கொள்ளும்வரை அவருடைய சித்தம் எம்மை வழிநடத்திக் கொண்டேயிருக்கும். இன்றைய தினமதில் நீங்கள் மிக மகிழ்ச்சியோடும் நன்மைகளோடும் வாழ சகலவற்றையும் தேவன் தாமே உங்களுக்கு தந்தருளி உங்களை ஆசீர்வதிப்பார். இன்றும் தேவனோடு கடந்து செல்லும் நாள் வெற்றியின் நாள்!



என் பிரியமே! என் இயேசு தேவனே! நீங்கள் மிகவும் நல்லவரப்பா. நீங்கள் செய்யும் காரியங்கள் யாவும் அழகாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் நிறைவேற்றுகிறபடியால் உம்மை துதித்து ஸ்தோத்தரிக்கிறேன். உங்கள் பிள்ளையாக இருப்பது என் பெரும்பாக்கியமே. இன்றைய நாளிலும் என் ஜீவியத்தை அழகாக அமைத்து தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. எரேமியா 29:11

ஜீவ மன்னா

ஜூன் 03

திங்கள்

# எமக்கு செம்மையான பாதைகளை காட்டும் நேசக்கரம் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 25 - 26

**"கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்."** (சங்கீதம் 27:11)

இனிய இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். உயிருள்ள தேவனால் எமக்கு அருளப்பட்ட இந்த நாளில் சகல நன்மைகளுக்காக பிரார்த்திக்கின்றேன். அன்பார்ந்தவர்களே, நாங்கள் வாழ்கின்ற இந்த சமூகத்தில் மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவி உபகாரங்கள் செய்கிறவர்களாகவும் உபகாரம் பெற்றுக் கொள்கிறவர்களாகவும் இருக்கிறோம். பரந்த மனப்பான்மை சிந்தைக் கொண்டவர்களாக அநேகர் நம் மத்தியில் இருக்கிறார்கள். மிகவும் இரக்க குணம் படைத்த சிந்தையோடு முழு உள்ளத்தோடு உதவி செய்யும் தயாள குணம் படைத்தவர்கள் அநேகர் நம் மத்தியில் காணப்பட்டாலும் இவர்கள் ஒருவராலும் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு ஒத்தாசையை தேவனுடைய அநுக்கிரகத்தால் எமக்குப் பெற்றுக் கொள்ள முடியும். அதைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பதை இன்றைய தினம் செய்திக்கூடாக அறிந்துக்கொள்வோம். இதைக் அறிந்துக் கொள்ளக்கூடிய சிலாக்கியம் பெற்றவர்களே! நீங்கள் தேவ கிருபையைப் பெற்றுக் கொண்ட அதிர்ஷ்டசாலிகள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளத்தில் மன அமைதியை சமாதானத்தை வேறு ஒரு மனிதன் மூலம் எமக்கு பெற்றுக் கொள்ள முடியாது. எமது உள்ளமும் ஆத்துமாவும் ஒன்றாக இணைந்து பெற்றுக்கொள்ளும் இந்த மன அமைதி சமாதானம் ஆத்துமாவின் சொந்தக்காரரான எம் ஆத்தும நேசரால் அன்றி வேறு ஒருவராலும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. உங்கள் உள்ளத்திற்கு ஆத்துமாவிற்கு ஏதும் மாற்றம் உண்டாக வேண்டுமெனில் அதை செயல்படுத்தக்கூடியவர் உங்கள் சிருஷ்டிகரான இயேசுக்கிறிஸ்து மாத்திரமே. எமது தின நாளின் ஆரம்ப வார்த்தைகள் தாவீது ராஜா எழுதிய 27:11 சங்கீதத்தின் படி கர்த்தாவே உமது வழியை எனக்கு போதித்து என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும் என்று வசனம் குறிப்பிடுகின்றது. இதை இப்படியும் அர்த்தம் கொள்ளலாம். இயேசு கிறிஸ்து உங்களுக்கு ஏற்றபடி பிரியமானபடி நான் ஜீவிக்க வேண்டுமென விரும்புகிறீர்களோ? அதை எனக்கு கற்றுத் தாருங்கள்.அவரின் விருப்பங்கள் அபிலாசைகள் எதிர்பார்ப்புகள் அநேகம் இவ் பூமிக்குரிய காரியங்களில் எதிர் காலத்தின் பெற்றுக் கொள்ள வேண்டிய வெற்றிகள் இவைகள் யாவற்றையும் விட்டு விட்டு தேவனுடைய விருப்பத்தை மாத்திரம் செயல்ப்படுத்த ஆயத்தமாயிருங்கள்.

தேவ பிள்ளைகளே, நானும் நீங்களும் மாம்சபிரகாரமாக ஜீவிக்கிற மனிதர்களாக பூமியில் ஜீவிக்கலாம். ஆனால் தேவன் எம்மைத் தெரிந்துக் கொண்டு ஆத்துமீகத்துக்குரியவர்களாக மாற்றினதுமன்றி எம்மை பரலோகத்தில் உரிமையுள்ள சொந்தப் பிள்ளைகளாக மாற சந்தர்ப்பம் கொடுத்துள்ளார். ஆகையால் நாங்கள் அவருடைய விருப்பம் எம்மில் செயல்படும்படியாக எல்லாக் காரியங்களையும் விட்டு விட வேண்டும். இப் பூமியில் விருப்பங்கள், உலகத்தின் பெருமைகளை, மாம்சத்தின் பாவக்கிரியைகள் இவைகளெல்லாம் விட்டு விட்டு தேவனுடைய விருப்பத்தைச் செய்ய வாஞ்சிக்கும்போது அவருடைய அன்பைத் தேடி அவரை பின்பற்றிச் செல்லும் போது எம் ஆத்துமாவாகிய உள்ளம் அமைதியடைந்து தெய்வீக சமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியும். இவ் உலக வழிகள் அல்ல அவருடைய வழிகளே எம் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் அமைதியை சமாதானத்தை தரும். ஏசாயா 55:8 என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். என்று எழுதப்பட்டுள்ளது. தேவனுடைய வழிகளும் நினைவுகளும் மனிதனுடைய நினைவுகளும் வழிகளும் முரண்பாடனவைகள். ஆகையால் தேவனுடைய விருப்பம் நிறைவேற நாங்கள் மாற வேண்டும் அப்போது தேவ சித்தம் எம்மில் செயல்படும். தேவ சமாதானம் எம்மை சம்பூரணப்படுத்தும். இன்றும் உங்களுக்கு வெற்றிகரமான நாள் உரித்தாகட்டும்.



என் அன்புத் தகப்பனே சர்வ பராக்கிரமான தேவனே உம் அன்பால் என்னை நிரப்புங்கள். உங்கள் பாசம் மாத்திரமே என்னைத் தேற்றும் எனக்கு மன அமைதி, சந்தோஷம் தெய்வீக சமாதானம் யாவையும் உங்கள் சமூகத்தில் பெற்றுக் கொள்ளும்படி உங்கள் கிருபையை இன்றும் எனக்கு தந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

---

இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. ஏசாயா 48:17

ஜீவ மன்னா

ஜூன் 04

செவ்வாய்

# உங்களை விடுவிக்கும் உங்கள் தேவாதி தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 27 - 28

**"இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்;..."** (ஏசாயா 43:1)

நசரேயனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால் ஜீவமன்னா தினசரி இதழின் தியானங்களை நுகரும் வாசக நேயர்களாகிய உங்களை வாழ்த்தி வரவேற்கிறேன். எழில் கொஞ்சும் இயற்கையின் நியதிகளை நாம் மிக ஆர்வத்தோடு பார்ப்போமானால் படைத்தவரின் அற்புதக் கிரியைகளை நாம் கண்டு வியக்கலாம். தேசத்தில் ஒரு கால நிலையில் ஒரு இன மரங்கள் ஒரு இலைக்கூட இல்லாதபடி எல்லாம் உதிர்ந்து விடும். காலநிலை மாறும் போது அம்மரங்கள் திரும்பவுமாக துளிர்விட்டு பசுமையான இலைகள் நிரம்பி காணப்படும். இது எமது தேவனின் சிருஷ்டிப்பின் அற்புதம். இது அவருடைய நியமத்தின்படி நிறைவேறுகிறதாயிருக்கிறது. இதை யாராலும் நிறுத்த முடியாது.

அன்பார்ந்தவர்களே, எமக்களித்திருக்கும் இந்த இயற்கையின் நடைமுறைகள், நியமங்கள், காலங்கள், என்று பிரிவுப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருந்தாலும் அவருடைய படைப்புகளில் மிக உயர்ந்த படைப்பில் இப்படிப்பட்ட காலங்கள் நியமங்களை தேவன் ஏற்படுத்தவில்லை. மனிதர்களாகிய நாங்களே வாழ்வின் செழிப்பின் காலம், வறட்சியின் காலம் என வழிவகுத்து அமைத்துக் கொண்டுள்ளோம். ஆனாலும் இதனால் ஒரு நன்மையும் எம்மால் பெற்றுக் கொள்ள முடியாது. ஆயினும் ஒரு மனிதனை தாயின் கர்ப்பத்தில் உருவாக்கி இம் மண்ணில் பிறக்கச் செய்து இவ்வுலக இன்பங்களை, ஆசீர்வாதங்களை அனுபவிக்கும்படி அநேக வருடங்களை அல்லது காலங்களை நியமித்த சர்வல்லமையுள்ள பரமனைக் குறித்து அறிந்து அவரின் விருப்பத்தின்படி உத்தமும், சன்மார்க்கமும் நிறைந்த நல்வாழ்வை வாழுபவருக்கு எந்நாளும் அவருடைய நிறைவான ஆசீர்வாதங்கள் வந்து சேரும். அவருக்குள் யாவும் செழிக்கும். ஏனெனில் தேவனை ஏற்றுக்கொண்டு அவருடைய புத்திரராக இருக்கும்படி அவர்களை அழைத்தவர் அவர்களோடு கூட இருந்து வழி நடத்துகிறார். சங்கீதம்1:3ன்படி அவர்கள் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியை தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்ற வார்த்தைகள் இவர்களின் வாழ்வில் நிறைவேறுகிறது.

ஆகையால் தேவ பிள்ளைகளே! நீங்களும் மனம் சோர்ந்து போகாதபடி தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியுங்கள். அவருக்கு முன்பாய் உத்தமமாய் இருங்கள். நீங்கள் அவரைத் தெரிந்துக் கொண்டபடியால் அவருடைய சுய சித்தத்தின்படி உங்களை தெரிந்துக் கொண்டபடியால் நீங்கள் அவருடைய பிள்ளைகளானபடியால் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் எல்லா காரியங்களையும் தவறாது கிரமமாக நடைபெறும்படி அவர் யாவற்றையும் நியமித்திருக்கிறார். நீங்கள் எங்கிருந்தாலும் அவருடைய நியமத்தின்படி ஏற்ற வேளையில் நிறைவேற்ற தேவனானவர் விஷேசித்த கவனத்தோடு உங்களை நோக்கிக் கொண்டிருக்கிறார். ஏசாயா 43:1 உங்களை மீட்டுக் கொண்டார்.உங்களுக்கு வெற்றிகரமான நாள்!



*என் சிருஷ்டிகரான கர்த்தாவே! என்னை உங்கள் பிள்ளையாக தெரிந்தவரே! நீங்கள் என்னோடிருக்கிறபடியால் நான் பாக்கியசாலி. இன்றும் என்னை உம் கரங்கள் வழி நடத்தட்டும். உங்கள் விருப்பத்தின்படி உங்கள் ஆசிகளை தந்து என் காரியங்களை வாய்க்கப்பண்ணும்படியாய் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~*

---

அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும்,
தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான். சங்கீதம் 24:5

**ஜீவ மன்னா**
**ஜூன் 05**
**புதன்**

# கர்த்தருடைய கண்கள் உங்கள் மேல் நோக்கமாயிருக்கிறது!

**இன்றைய வேதவாசிப்பு**
**ஆதியாகமம் 29 - 30**

**"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கிவிடுவிக்கவும்; பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது."** (சங்கீதம் 33:18,19)

அன்புக்குரிய தேவனுடைய பிள்ளைகளே! சதாகாலங்களிலும் ஜீவிக்கிற ஒரே தேவன் இயேசுகிறிஸ்துவின் மகிமையான நாமத்தினால் இன்று உங்களுக்கு சௌபாக்கியமுள்ள நல்ல நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன். உங்கள் தேவனானவர் உங்கள் கண்களால் கண்டு தரிசிக்க முடியாத அரூபியான தேவனாக இருப்பதால் அவருடைய கருவிழிகள் எப்போதும் உங்களையே நோக்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய விஷேசித்த அவதானம் உங்கள் மீது நோக்கமாயிருக்கிறது. ஆகையால் உங்களுக்கு சிறிதான அல்லது பெரிதான விபத்துகள், கஷ்டங்கள், உயிராபத்துகள், பயங்கரமான நோய்கள், வியாதிகள், ஏதும் நேரிட அனுமதிக்க மாட்டார். நீங்கள் அவருடைய சொந்தப் பிள்ளைகளாய் இருப்பது உங்கள் பாக்கியமே.

தேவ பிள்ளைகளே, உலகில் 700 கோடிக்கு மேற்ப்பட்ட ஜனங்கள் ஜீவிக்கின்றார்கள். அவர்கள் மத்தியில் தனி நபரான உங்களை ஒரு போதும் மறப்பதில்லை. வேதாகமத்தில் மத்தேயு 1:17ல் உள்ள வசனங்களின் பிரகாரம் ஆபிரகாம் முதல் கொண்டு தாவீது வரையும் தாவீது முதற் கொண்டு இஸ்ரவேலர் பாபிலோன் தேசத்திற்கு அடிமைகளாக கொண்டு போகப்பட்டது வரை,பாபிலோன் கொண்டுச் செல்லப்பட்டதிலிருந்து இயேசுகிறிஸ்து வரை பரம்பரை 12 தலை முறைகள் என எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் தெரிவது யாதெனில் இயேசுகிறிஸ்து பிறக்கும் காலம் வரை தேவனுடைய சித்தம் இப்பூமியில் நிறைவேறும்வரை அநேக மனிதர்கள் பாவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரையாகிலும் தேவன் மறந்துவிடவில்லை அவர்களுடைய பெயர்கள் யாவும் மத்தேயு 1:17 வசனங்களில் எழுதப்பட்டுள்ளது. அந்த பரம்பரையினரைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடையவர்களே, அவருக்கு பயந்து அவருடைய கிருபைக்கு காத்திருப்பவர்களே! உங்களை விடுவித்து காக்க அவர் கண்கள் உங்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. தேவனானவர் உங்கள் பெயர் விலாசம் ஊர் உங்கள் பரம்பரை என்ன? இன்று உங்கள் நிலமை என்ன? உங்களுக்கு அவரால் என்ன ஒத்தாசை தேவை? என்ன ஆசீர்வாதம் வேண்டும் என யாவற்றையும் அறிகிறார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறவர்களாகவும் அவருக்கு காத்திருப்பவர்களாகவும் இருக்கின்றபடியால் உங்களைக் குறித்ததான சகல விபரங்களும் அவரிடத்திலே இருக்கிறதான ஜீவ புத்தகத்தில் அடங்கியிருக்கிறபடியால் நீங்கள் அவரையே விசுவாசித்து இடைவிடாமல் ஜெபம் செய்து உண்மையோடும் உத்தமமாய் இருங்கள். உங்களுக்கு வரும் ஒவ்வொரு சவால்களிலும் அவர் உங்களோடிருப்பார். உங்களை காத்தருளுவார். இன்றும் அருமையான வெற்றியின் நாளாக திகழட்டும்.



என் தேவனே! என்னை ஒரு போதும் மறவாதவரே என் விசுவாசம் உங்கள் மேலிருப்பதால் நீங்கள் என் மீது விஷேச அவதானம் உள்ளவராய் இருக்கிறீர்கள். இன்றைய தினத்திலும் உங்கள் விருப்பம் போல் என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 66:22

ஜீவ மன்னா

ஜூன் 06

வியாழன்

## உங்கள் எல்லாத் தேவைகளையும் சம்பூரணப்படுத்தும் உங்கள் பரலோக தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 31 - 32

**"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக."** (சங்கீதம் 138:8)

தேவனுக்குள் அன்பான என் தேவ ஜனங்களே சர்வத்தையும் படைத்த சர்வ வல்லமையுள்ள இயேசுவின் இனிய நாமத்தினால் உங்களுக்கு இந் நாள் சுபநாளாக அமையும்படி வாழ்த்துகிறேன். உங்கள் ஆத்துமாவின் வாஞ்சைகளையும் சரீர சுகம், பெலன், போன்றவைகள், லௌகீக ரீதியாக சகல தேவைகளையும், ஆத்துமீக வளர்ச்சியான காரியங்கள் யாவையும் நிறைவேற்றி சர்வ வல்லமை, பராக்கிரம் நிறைந்த உயிருள்ள தெய்வம், அவர் மகத்துவமான தேவன், அவருடைய சொந்த விருப்பத்தின்படி நம்மைத் தெரிந்துக் கொண்டு எம்மை தம்முடையவர்களாக மாற்றி மாபெரும் பாக்கியத்தை கொடுத்தவர் அவரே.

தேவ பிள்ளைகளே, உங்கள் பெற்றோர் உங்கள் மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறார்கள், என்பதை அறிந்ததே, குழந்தைப் பருவம் முதல் இந்நாள்வரை உங்கள் தேவைகள் யாவற்றையும் தேடிப்பார்த்து நிறைவேற்றி மிகவும் பாசத்தோடு உங்களை வளர்த்து ஆளாக்கியிருக்கிறார்கள். வாழ்க்கையில் எந்த கஷ்டத்தையும் உணராதபடி யாவற்றையும் அவரே தாங்கி சுமந்து உங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து காத்து வந்தார் அல்லவா? நீங்கள் வளர்ந்து சகல காரியங்களையும் அறிந்து ஆவியில் பெலப்பட்டு பக்குவத்தை பெற்றுக்கொண்டு பொறுப்புள்ளவர்களாய் மாறும் வரை கல்வி இன்னும் சகல தேவைகளையும் குறையின்றி செய்தார் அல்லவா? பெற்றோரின் அன்பு, பாசம், அக்கறை இதைக் குறித்து கூறி அறிய வேண்டியதொன்றல்ல உங்கள் பெற்றோரே இப்படி கரிசனையுள்ளவாகளாய் இருந்தால் உங்களை கர்ப்பத்தில் உருவாக்கியவர், அன்று முதல் உங்களை தெரிந்துக் கொண்டவர் உங்களைக் குறித்து எவ்வளவு அக்கறையும் கரினையும் உள்ளவராக இருப்பார். என்பதை உணர்ந்துக் கொள்ளுங்கள்.

அருமையானவர்களே, தேவனை முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள். சங்கீதம் 138:8ல் தாவீது ராஜா கூறுகிறார், தேவன் அவருடைய எல்லா காரியங்களையும் செய்து முடிப்பார், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று மத்தேயு 6:33ல் இயேசுகிறிஸ்து கூறுகிறார். தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும். என்று. ஆகையால் எதைக் குறித்தும் கவலைப்பட தேவையில்லை உங்கள் தேவைகள் இன்னதென்று அறிந்துள்ள தேவன் உங்களுக்காக யாவற்றையும் செய்து முடிப்பார். உங்கள் தேவைகளை ஏற்ற வேளையில் சந்திப்பார். தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு இப்போதே தேவையான உடை, ஆபரணங்கள், உணவு, சரீர ஆரோக்கிய, வாழ்க்கைக்கு தேவையான பொருளாதாரம் எல்லாவற்றையும் சந்திக்கிறார். அவரது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாது எல்லா தேவைகளையும் நிறைவேற்றுகிறார். நீங்கள் முகம் கொடுக்க நேரிடும் சிறிய பெரிய பிரச்சினை எதுவாயிருந்தாலும் உங்களை கலக்கத்திற்கு உள்ளாக்குமானால் அதை ஒப்புவித்து ஜெபத்தில் அவரோடு ஆழமாய் இணைந்து விடுவீர்களானால் சகல தேவைகளையும் சம்பூரணப்படுத்தி உங்களை ஆசீர்வதிப்பார். இன்று உங்கள் தேவைகளை சந்திக்கும் வெற்றியின் ஆசீர்வாதமான நாள்.



என் அன்புத் தகப்பனே! என்னை படைத்தவரே, சகலமும் உம்முடைய கரத்தின் கிரியைகளே. உங்கள் பிள்ளையாக என்னை மாற்றிக் கொண்டபடியால் யாவற்றையும் எனக்கு உரிமையாக்கினவரே என் வாழ்வின் எல்லாக் காரியங்களையும் நீங்களே சம்பூரணப்படுத்தும்படியாய் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

மத்தேயு 6:8

ஜீவ மன்னா

ஜூன் 07

வெள்ளி

**உங்கள் துணையாளராக பாதுகாக்கும் தேவன்.**

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 33 - 34

**"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்."** (ஏசாயா 41:13)

என் அருமையான தேவ பிள்ளைகளே! உங்களுக்கு "இன்றும் இனிமையான நாளாக வேண்டுமென ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பிரார்த்திக்கின்றேன்". அதிகாலையிலே கண் விழிக்கும் நீங்கள் உங்கள் கடமைகளை ஆரம்பிக்கும் முன்னதாக தேவன் படைத்த இயற்கை நிகழ்வுகளில் சற்று உங்கள் அவதானத்தைச் செலுத்துங்கள். பலவகையான பறவைகளின் இன்னிசை நாதங்கள் கேட்கிறதல்லவா? இன்னுமொரு புதிய நாள் உருவாகியதை தமது குரலொலிகளில் இன்னிசை எழுப்பி ஆர்ப்பரிக்கின்றனவல்லவா? எங்கள் தேவனாகிய ஆண்டவர் அவைகளைப் பராமரித்து, அவைகளைப் போஷித்து வருவதால் அப்படி சந்தோஷமாக வாழ்கின்றன.

தேவ பிள்ளைகளே! தேவன் தமது வார்த்தையில் ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது என மத்தேயு 10:29ல் கூறுகின்றார். "இப்படியாக அவைகளில் ஒன்றுக்காயினும் எங்கள் படைப்பின் தேவனின் கரத்தில் தவறு நடைபெறாதெனின் தேவனின் மகிமைக்காக ஜீவிப்பதற்கு தெரிந்துக் கொண்ட உங்களுக்கும், எனக்கும் எந்தவித இடையூறும் ஏற்படாது. ஏனென்றால் எங்கள் தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றதென்றும். நாங்கள் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் மேன்மையானவர்கள் என்றும் தேவ வசனம் கூறுகின்றது. அவ்வண்ணமே அவர் எம் நினைவாகவே இருக்கிறார் எனவும் வசனம் கூறுகிறது. ஆகவே இப்படியாக எம்மை வழிநடத்தும் எங்கள் படைப்பின் தேவனைக் குறித்து தெரிந்துக் கொண்ட சொந்த பிள்ளைகளாக இருக்கிறோம். ஆகவே நாம் ஒன்றையும் குறித்து கவலைப்பட அவசியமில்லை.

தேவ பிள்ளைகளே! இன்று உங்கள் தேவைகள் எவையாகவிருந்தாலும் அவைகளை பரமபிதா சந்தித்து வழிநடத்துவார். ஏசாயா 41:13ல் பரிசுத்த வேதாகம பிரதான வசனத்தில் தேவன் அறிவிப்பதாவது தேவன் "பயப்படாதே உனக்குத் துணை நிற்கிறேன்" என்று. எமது வலக்கரத்தை பிடித்திடுவாரென்பதையும் தேவனின் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வசனமும் வீணாய்ப் போய்விடாதென்பதையும் நீங்கள் முழு உள்ளத்தோடு தேவனை நோக்கி விசுவாசித்து உங்கள் அனைத்து காரியங்களையும் தேவனின் பாதத்தில் வைத்து ஜெபியுங்கள். எல்லா ஜனங்களின் மத்தியில் தேவனுடைய பிள்ளையாக உங்களை வேறுப்படுத்தி வைத்துள்ளமையால் உங்களுக்கு மிகுந்த இரக்கம் உள்ளவராக இருக்கின்றார். இன்றைய நாளில் உங்களை தேவன் நன்மையான காரியங்களால் நிரப்புவாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்கு வெற்றியின் நாள்.



என்னுடைய பிதாவே! நீரே என்னை படைத்தீர். நானே உங்கள் சொந்த பிள்ளையாவேன். நீங்கள் என்னை ஆசீர்வதிப்பீர்களென்று நானறிவேன். இன்றும் என்னை ஆசீர்வதித்து என் பிரச்சினைகளை நீங்கும்படியாக வேண்டுகிறேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்,
உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்;
கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள். ஏசாயா 30:18

ஜீவ மன்னா
ஜூன் 08
சனி

# நீங்கள் அவருடைய சொந்தப் பிள்ளையென வெளிப்படுத்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம் 35 - 36

**"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை."** (1 யோவான் 3:1)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! கர்த்தர் உண்டுபண்ணின நாளிலே நீங்கள் மகிழ்ச்சியோடு வாழும்படியாக ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் வாழ்த்துகிறேன். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை எவ்வளவாக நேசிக்கின்றாரோ, அதைவிட மேலாக எமது தேவபிதாவானவர் எங்களை நேசிக்கிறார். அவருடைய பிள்ளைகளாகிய எங்களை உலக வாழ் மனிதர்கள் மத்தியில் உயர்வடையச் செய்யும்படி கௌரவப்படுத்தும்படியாக அநேக செயல்களை எமக்கு செய்கிறார். ஏனெனில் உலகின் வாழும் மற்ற மனிதர்கள் உங்களைக் கண்டு உங்களின் நன்மையான, நல்ல செயல்களைக் குறித்து பேசுவதை எமது தேவன் விரும்புகிறார்.

அருமையானவர்களே! 1 யோவான் 3:1 வசனத்தின்படி நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் எமக்கு பாராட்டின அன்பு பெரிதென்று அறியப்படக்கூடியதாக இருக்கிறது. தேவன் தமது அன்பினால் எம்மை இழுத்துக் கொள்கிறார். எம்மை அவருடைய பிள்ளைகள் என மற்றவர்கள் அறியும்படி எம்மை உயர்த்தி எம் வாழ்வில் அவருடைய நன்மையான ஈவுகளைப் பெறச் செய்து எம்மைக் கௌரவப்படுத்தக் கூடிய கிரியைகளைச் செய்கிறார். இன்றைய நாளிலும் விடியற் காலைப்பொழுதிலே நீங்கள் நித்திரை விட்டெழுந்து ஜெபம் செய்து அவர் திருப்பாதத்தில் இன்றைய நாளை ஒப்புவித்து உங்கள் இருதயத்தின் பாரத்தை நீக்கி ஆறுதல் பெற்று தினக் கடமைகளை ஆரம்பியுங்கள். சர்வ பராக்கிரமுள்ள எம் தேவன் எம்மோடிருக்கிறபடியால் நீங்கள் அவருடைய சொந்தப் பிள்ளை என மற்றவர்கள் அறிந்துக்கொள்ளும்படியாக உங்கள் வாழ்வில் மகாப் பெரிய காரியங்களை அவர் செய்து முடிப்பார். ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

இவ் வேளைகளிலும் உலகின் வாழும் மனிதர்களுக்கூடாக அவர்களின் செய்கையினால், வார்த்தைகளினால் மனமுடைந்து வேதனையோடு இருக்கக் கூடும். அல்லது உங்களைக் குறித்து தரக்குறைவாக செய்திகளை வெளியிட்டு உங்களை அவமானப்படுத்தி வெட்கப்படுத்தயிருக்கலாம். ஆயினும் நீங்கள் மனம் தளர்ந்து போகாதபடி தைரியமாயிருங்கள்.உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாக பலன் வரும் இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள், என்று ஏசாயா 61:7 வேதாகம வசனம் கூறுகிறது. இது கர்த்தருடைய வாக்குத்தத்தமாயிருக்கிறது. நீங்கள் அவருடைய வசனத்தைக் குறித்தும் பொருத்தனைகளை குறித்தும் விசுவாசத்தோடு இருங்கள். தேவனுக்குள் கீழ்ப்படிந்து உறுதியாக நிலைத்திருந்து தேவனுடைய சொந்த பிள்ளையாக ஜீவியுங்கள். இன்றும் வெற்றியின் நாள்.



என் தேவனே! என்னை எல்லா தீங்குக்கும் விலக்கி காத்து என் துன்பங்கள், அவமானங்கள் வேதனைகள், வெடகம் போன்ற இலச்சைக்குப் பதிலாக எனக்கு இரண்டத்தனையாகப் பலன் கொடுத்து ஆசீர்வதிக்கும் தேவனே உமக்கு நன்றி. இதே போல் இன்னும் அநேகருடைய வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையாக அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். ~ஆமென்~

---

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்;
நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ,
அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும்,
உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். யோவான் 15:16

ஜீவ மன்னா

ஜூன் 09

ஞாயிறு

நான் உன்னை விட்டு
விலகுவதுமில்லை,
உன்னைக் கை விடுவதுமில்லை
என வாக்களித்த தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம்
37 - 38

**“நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.”** (யோசுவா 1:5)

தேவனுடைய கிருபையில் ஒவ்வொரு நாளும் வழிநடத்தப்படும். என் அன்பு பிள்ளைகளே! ஜீவிக்கின்ற அன்பு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு ஒப்பற்ற மகிழ்ச்சியை தரும் நாளாக இருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். மேலே கூறப்பட்டுள்ள வேதாகம வசனத்தில் எங்கள் தேவனாகிய கர்த்தர். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை ஒரு நாளும் கைவிடுவதுமில்லையென வாக்களித்திருக்கின்றார். ஆகையால் இந்த வேத வசனத்தின்படி நாம் தேவனின் சொந்த பிள்ளைகளாகும்படி தேவன் வேறுபடுத்திக் கொண்டமையால்“நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்.

தேவ பிள்ளைகளே! நாங்கள் ஒரு போதும் தேவனை தெரிந்துக் கொண்டிருக்கவில்லை ஆனாலும் -நமது தேவன் எங்களை தாயின் கர்ப்பத்தில் உருவாக்கு முன்னரே எங்களை தெரிந்துக் கொண்டுள்ளார். என்று தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. அது உண்மையானது. சில வேளையில் நாங்கள் அவரைத் தெரிந்துக்கொண்டிருப்போமாயின் மிக குறுகிய காலத்திலேயே நாங்கள் தேவனை மறந்து தேவனை விட்டு விலகிடவும், அவரை கைவிட்டு விடவும், அநேக சந்தர்பங்களுண்டு. ஆனாலும் தேவன் தனது சொந்த விருப்பத்தின்படி எங்கள் ஒவ்வொருவரையும் தெரிந்து, வேறுபடுத்திக் கொண்டமையால் மேற் கூறப்பட்ட பிரதான வேத வசனத்தின்படி ஒரு நாளும் தேவன் எம்மை விட்டு விலகி விடுவதுமில்லை எம்மைக் கைவிடுவதுமில்லை. ஏசாயா 46:4ல் உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன். நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான் அப்படிச் செய்து வந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன் நான் சுமப்பேன், என்று எழுதியுள்ளமை இன்னும் எம்மை உறுதியாய், பெலனாய் நிற்கச் செய்கின்றது. அப்படியே எரேமியா 31:3ல் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். ஆதலால் காருண்யத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன் என்று எழுதியுள்ளபடியால் தேவன் ஒரு போதும் எம்மை மறக்கமாட்டார் என்பது எமக்கு மிகுந்த, உறுதியான விசுவாசம்.

தேவ பிள்ளைகளே! யோசுவாவுக்கு வெளிப்படுத்தியதில் விசேடமானது என்னவெனின் “தேவன் மோசேயோடு இருந்தது போல உன்னுடன் இருப்பேன் என்று கூறியமையாகும். தேவன் சதாகாலங்களிலும் அவ் வண்ணமே வாக்கு மாறாதவராக இருக்கிறார். மோசேயை யோசுவாவை தெரிந்தெடுத்த தேவன் அவரது சொந்த அபிப்பிராயத்தில் எங்கள் ஒவ்வொருவரையும் தெரிந்தெடுத்துள்ளார். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! இன்று நீங்கள் முகங் கொடுக்க வேண்டிய சகல பிரச்சினைகள், துன்பங்கள், சவால்கள், நோய்கள் குறித்து தேவன் நன்கு அறிவார். அவைகள் அனைத்திற்கும் கொடுக்க வேண்டிய தீர்வுகள் என்னவென்றும் தேவன் நன்றாகவே அறிவார். அவைகள் அனைத்திற்கும் கொடுக்க வேண்டிய தீர்வுகள் என்னவென்றும் தேவன் நன்றாகவே அறிவார். நீங்கள் பயப்படாதீர்கள். இன்றைய நாளை தைரியத்தோடு ஆரம்பியுங்கள். உங்களை பெயர் சொல்லி அழைத்த உங்கள் தேவ பிதாவானவர் உங்களோடிருந்து எல்லாவற்றிலும் ஜெயத்தைப் பெற்றுத் தருவார். உங்களுக்கு வெற்றியின் நாள்.



என் தேவனே என் பரலோகத் தேவனே நான் உமது சொந்தப் பிள்ளை. உங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் எம்மை தெரிந்தெடுத்தபடியால் நீங்கள் என்னை ஒரு போதும் கை விடுவதில்லை எனவும் என்னை விட்டு விலகுவதுமில்லை என்பதால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன். ஏசாயா 41:13

ஜீவ மன்னா

ஜூன் 10

திங்கள்

## சிறுமைப்படுத்தப்பட்ட உங்களை கீர்த்தியினாலும் புகழ்ச்சியினாலும் உயர்த்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 39 - 40

**"...அவர்கள் வெட்கம் அநுபவித்த சகலதேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன்."** (செப்பனியா 3:19)

எனக்கருமையான தேவ ஜனங்களே! இயேசுவின் நாமத்தில் இன்று உங்களுக்கு அற்புதமான நாளாக வேண்டுமென நான் வாழ்த்தி, பிரார்த்திக்கின்றேன்.தேவன் வெளிப்படுத்தல் 8:12ல்"சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொரு பங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கும் இருளடைந்தது. பகலிலும் மூன்றிலொரு பங்கு பிரகாசமில்லாமற் போயிற்று. இரவிலும் அப்படியேயாயிற்று" என்று எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் உங்கள் தேவன் இயேசுக்கிறிஸ்துவானவர் உங்களுக்கு "நித்திய வெளிச்சமாக இருப்பதனால் உலகம் இருளடைந்த போதும் தேவன் உங்களுக்குள் வாசம் பண்ணுவதால் உங்களுக்குள்" தேவ ஒளி பிரகாசிப்பதாக.

தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் "தேவனுக்குள் ஜீவன் இருந்தது அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாக இருந்தது" என்று எழுதப்பட்டுள்ளமையால் தேவனே உங்களுக்கு வெளிச்சமாக இருப்பாராக. ஆகையால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகாயத்தில் தோன்றாவிடினும் இயேசு உங்களுக்கு போதுமானவர். ஆகையால் "உள்ளம் கலங்காதிருங்கள்." இன்று தேவனுடைய வசனம் உங்களுக்கு சொல்கிறதாவது "தேவன் நீங்கள் அநுபவித்த அவமானங்கள் நிந்தைகளுக்கு பதிலாக உங்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாக்கச் செய்வேன்" என்று கூறப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளே சில நேரங்களில் மனிதர்கள் திட்டமிட்டு எங்களை அவமானப்படுத்தும் சந்தர்ப்பங்கள் உண்டு. இல்லாவிடின் அறிவற்ற செயலின் காரணமாக எங்கள் தேவனின் முன்னிலையில் பாவஞ் செய்கிறவர்களாகி விடுவதால் எங்களுக்கு தேவன் அவமானத்தை அநுபவிக்க அனுமதி கொடுத்து விடுகின்றார். அப்படியும் இல்லாவிட்டால் எங்கள் "எதிராளியான சாத்தான்" தேவனிடமிருந்து எம்மை தூரமாக்கும்படியாக எங்கள் ஆத்மீக பயணத்தை தடுக்கும் முகமாக பலவித சதித் திட்டங்களின் மூலமாக "அவமானத்தை" உண்டாக்க எத்தனிக்கின்றான். ஆனாலும் எங்கள் தேவன் எம்மோடு இருப்பதனால் பயப்படாதீர்கள்.

தேவ பிள்ளைகளே! உங்களை "அழைத்தது தேவனே." அவரே உங்களைத் தேர்ந்தெடுத்தார். அவர் உங்களை தேர்ந்தெடுத்தது அவமானம் நிந்தைகள், உபத்திரவங்களை அநுபவித்து "அழிந்து" போகும்படியாக அல்ல. நீங்கள் அது போன்றவைகளினால் அதிகமான "துன்பத்தை" எதிர் நோக்கலாம் அவைகளினால் உங்கள் உள்ளமானது அதிகமான கவலைக்குள்ளாகலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் தேவ பாதத்தை இறுகப் பிடித்து "ஜெபத்தில்" தரித்திருங்கள் தேவனின் முன்னால் உங்கள் "உள்ளத்தை" ஊற்றுங்கள். தேற்றரவாளன் உங்களைத் "தேற்றுவராக" இன்றைய நாளிலும் சில காரணங்களின் நிமித்தமாக இப்படியான சூழ்நிலைகளில் மனத்துக்கத்தோடு காணப்படுகின்றீர்களா? உங்கள் தேவன் அதிலிருந்து உங்களை மீட்டுக்கொள்ள இப்பொழுதும் சகல ஆயத்தங்களையும் செய்திருக்கிறார் என்று விசுவாசியுங்கள். இன்றைய நாள் முடிவடையும் முன்னர் உங்கள் உள்ளத்திலுள்ள வேதனையை அகற்றி ஆறுதல்படுத்துவாராக. ஆறுதலான நாளாகும்.



எங்கள் பிதாவே நீங்கள் சுயகௌரவத்தை பாதுகாக்கும் தேவன். நான் உங்கள் சொந்தப் பிள்ளை. என்னால் உங்கள் நாமம் மகிமையடைய வேண்டும். எனக்கூடாக உங்கள் நாமம் மகிமையடையும்படியாக என்னுடைய அவமானங்களை அழித்துப்போடும்படியாக ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில். ~ ஆமென்~

---

அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும்,
அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும்;
அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால்
ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள். ஏசாயா 61:9

ஜீவ மன்னா

ஜூன் 11

செவ்வாய்

## ஒரு நாளும் மாறாத தேவனின் அன்பு !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 41 - 42

**"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்."** (மத்தேயு 24:12)

அருமையான தேவ பிள்ளைகளே! இன்றைய நாள் "மிக்க மகிழ்ச்சியான நாளாக வேண்டும்" என பிரார்த்திக்கின்றேன். இன்றைய நாளிலும் துன்மார்க்கராக வாழ்கின்று ஜனங்கள் அநீதியிலிருந்து விலகி நீதிமான்களாக வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் ஜனங்கள் அதனை ஏற்றுக்கொள்ளாதபடியால் இன்று உலகெங்கும் பலவிதமான துர்நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அப்படியாக அநேக நிகழ்வுகள் நடைபெறுவதைக் குறித்து கேட்கவும் கண்களால் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. தேவ பிள்ளைகளே, துன்மார்க்கர் மத்தியில் உங்களைத் தேவன் "நீதிமான்களாக" வாழ வைத்துள்ளமையால் நீங்கள் "அதிர்ஷ்டக்காரர்கள்."

தேவ பிள்ளைகளே! லேவியராகமம் 20:26ல் தேவனாகிய கர்த்தர் நீங்கள் என்னுடையவர்களாகும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன் என்று கூறுகிறார். ஆகையால் உலகத்தின் மனிதர்கள் போல் சிந்தனைக்கேற்றவாறு வாழ்ந்து தேவனை நமஸ்கரிக்க முடியாதென்பதை தெளிவாக உணர்ந்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் தேவன் ஆவியாக இருக்கின்றார். தேவனை ஆராதிப்பவர்கள் ஆவியோடும் உண்மையோடும், பரிசுத்தத்தோடும் ஆராதிக்க வேண்டும் என்று தேவ வசனத்தில் எழுதியுள்ளமையால் எங்களுக்கு இரட்டை வாழ்க்கை வாழ முடியாதென்பது மிகத் தெளிவாகும். "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். காருண்யத்தால் உன்னை மீட்டுக் கொண்டேன்." என்று தேவன் எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளபடியால், நாங்கள் ஆவிக்குரிய இப்பயணத்தில் ஏதாவதொரு இடத்தில் பின்மாற்றமாகி செல்வோமானால், இல்லாவிடின் தேவனை விட்டு விலகி உலகில் திக்கற்றவர்களாக நிற்போமாயின் எங்களை மீண்டுமாக தேடி வந்து கிட்டிச் சேர்த்துக் கொள்வார். நூறு ஆடுகள் கொண்ட மந்தையுடைய மேய்ப்பன், அவைகளில் ஒன்று காணாமல் போனால் மிகுதியான தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு மலைப் பிரதேசங்களில் வழி தவறிச் சென்ற ஆட்டை தேடிப் போவது போல எங்கள் தேவன் எங்களையும் தேடி வருவார்.

தேவ பிள்ளைகளே! சில தேவ பிள்ளைகள் அவர்கள் நட்புக் கொள்ள ஆத்மீக பிள்ளைகளை மாத்திரமே தெரிந்துக் கொள்வார்கள். மற்றவர்களை புறக்கணித்து விடுவார்கள். ஆனால் அது தேவனுக்கு முன்னால் பிரியமில்லாத காரியம் என்பது எனது மனசாட்சிக்கூடாக காண்கிறேன். மேலே குறிப்பிட்ட மத்தேயு 24:12ல் கூறப்படுகின்றதாவது அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். என்பதாக நீங்கள் இயேசுக்கிறிஸ்துவின் பிள்ளையானபடியால் உங்கள் உள்ளத்தினால் கூட யாருக்குமே தீங்கு இழைக்காதபடி உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனின் அன்பிற்கு பின்னால் தொடர்ந்து செல்லுங்கள். தேவன் உங்களை மிகவும் நேசிக்கின்றார். தேவன் திராட்சைக் கொடி. நீங்கள் அதன் கிளையாக தேவனுக்குள் அன்பின் கனியாக பலன் கொடுக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கின்றார். உங்களுக்கு வெற்றியின் நாள்.



என் தேவனே! உங்கள் அன்பு என்றும் மாறாதது. நீங்கள் சதாகாலமும் அன்பு கொள்வீர்களாக, ஆனாலும் தேவனே, சாத்தான் எனக்கும் அநீதியானவைகளை பிறப்பிக்க முயற்சி செய்யும் வேளைகளை நீங்கள் மாத்திரமே அறிவீர்கள். அவனுக்கு விரோதமாக இருப்பதற்கு உங்கள் அன்பில் நிரப்புங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

---

அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். I யோவான் 4:8

ஜீவ மன்னா

ஜூன் 12

புதன்

## உங்களை சமாதானத்தினால் ஆசீர்வதிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 43 - 44

**"பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்."** (சங்கீதம் 29:11)

தேவ பிள்ளைகளே! நம்முடைய தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் சமாதானமும் இன்றைய இந்த புதிய நாளில் உங்களை நோக்கி பரத்திலிருந்து இறங்கி வரவேண்டுமென ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் பிரார்த்திக்கின்றேன். அன்பார்ந்தவாகளே! இலங்கையின் கொழும்பு பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்ட நான் இந்த ஜீவ மன்னா என்ற ஆத்மீக சஞ்சிகைக்கூடாக உங்களை சந்திப்பதில் தேவனுக்குள் மிக மகிழ்ச்சியாயிருக்கிறது. நீங்கள் இந்த இலங்கை தேசத்தில் எவ்விடத்தில் வசிப்பவராக இருப்பினும் வெளிநாட்டில் வசிப்பவராக இருப்பினும், ஆசியா கண்டத்தில் வாழ்பவராயினும் ஐரோப்பா கண்டத்தில் வசிப்பவராக இருந்தாலும் நாங்கள் இந்த சஞ்சிகைக்கூடாக சந்திப்பது தேவன் உங்கள் மீது வைத்திருக்கும் பேரன்பினாலும் மிகுந்த அக்கறை உள்ளவராக உங்களை வழிநடத்துவதினாலே ஆகும்.

அன்பார்ந்தவர்களே! எமது தெய்வம் சர்வ வல்லமை பொருந்தியவர். அவர் உங்கள் மீது மிகுந்த அக்கறை உள்ளவராக இருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒத்தாசை கடந்து வருவது சாதாரண மனிதனுக்கூடாக அல்ல. அகலத்தையும் படைத்து ஆளுகை செய்கிற சர்வ பராக்கிரமமுள்ள ஜீவனுள்ள தேவனிடமிருந்தே ஆகும். நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காணலாம் என தேவ வசனம் கூறுகிறது. நீங்களும் முழு மனதுடன் அவரை விசுவாசியுங்கள். சங்கீதம் 29:11ல் இன்றைய ஜீவ மன்னா இதழின் ஆரம்ப வசனம் என கூறுகின்றது கர்த்தர் தம் ஜனத்திற்கு சமாதானத்தை அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்.

தேவ பிள்ளைகளே! மனிதர்கள் தங்கள் கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு அநேக காரியங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால் எவ்வளவு பணம், சொத்து, வசதிகள் இருந்த போதிலும் எந்த ஒரு செல்வ சீமானாக இருந்தாலும் ஒரு பயங்கர நோய், உயிர்ச்சேத வியாதிகள் ஏற்படும் பொழுது அவன் மிகவும் பரிதாபமான நிலமைக்கு தள்ளப்பட்டு விடுவான். இதை அறிந்த நேரத்திலிருந்து அவனும் அவனது குடும்பம் உற்றார், உறவினர்கள் யாவரும் நண்பர்கள் யாவரும் கலக்கத்துக்குள்ளாவார்கள். வைத்தியர்களும் சுகப்படுத்த முடியாது எனக் கைவிட்டால் அந்த மனித நிலமை மிக மோசமான நிலமைக்கு தள்ளப்படுவான். உள்ளத்தில் சமாதானம் இழந்து மிகவும் கவலைக்குரியவர்களாகி விடுவார்கள். தேவனுடையவர்களே! கலங்காதிருங்கள் உங்கள் கர்த்தர் சமாதானத்தின் தேவன். உங்கள் ஆண்டவராகிய கர்த்தர் கூறுகிறார். என சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். என்று ஆகையால் உங்களுக்கு ஏற்படும் வியாதிகள் கஷ்டங்களை குறித்து பயப்படாதீர்கள். நீங்கள் அவருடைய ஜனங்களாயிருக்கும்படி உங்களை தெரிந்துக் கொண்டார். அவருடைய ஆசியும் அருளும் அன்பும் கிருபையும் என்றும் உங்களோடிருக்கும். அவர் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் அளிக்கிற தேவன். உங்களுக்கு எந்த விதமான ஆபத்துக்களும் நேராது காத்துக் கொள்வார். உங்களை அவர் ஆசீர்வாதமாக வைத்திருப்பார். இன்றைய நாள் ஜெயத்தின் நாளாகும்.



என் அன்புத் தகப்பனே, நீங்கள் சமாதானத்தின் தேவன் எனக்கு நீங்கள் அளித்திருக்கும். சமாதானத்தை இல்லாமல் செய்யும் சாத்தானுடைய திட்டங்களை நிர்மூலப்படுத்தி என்னை காத்துக் கொள்ளுங்கள். ~ஆமென்~

---

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 54:10

ஜீவ மன்னா
ஜூன் 13
வியாழன்

## எலிசாவை வல்லமையான அபிஷேகத்தால் நிரப்பிய தேவன் உங்களுக்குள் இருக்கின்றார் !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
45 - 46

**"எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்."**
(2 இராஜாக்கள் 2:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு சந்தோஷம், சமாதானம், சுகம் நிறைந்த நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். மனிதர்களாகிய நாங்கள் எங்கள் வாழ்க்கை சம்பந்தமாக, எமது எதிர்காலத்தைக் குறித்து அறிந்துக் கொள்ள பிரியமுள்ளவர்களாக இருக்கின்றோம். ஆனாலும் நாம் சகல ஜாதி ஜனங்களிலும் மிகவும் "பாக்கியவான்கள்". ஏனென்றால் சர்வ வல்லமை பொருந்திய தேவனின் வசனங்களுக்கூடாக நாம் எமது ஜீவியத்தைக் குறித்தும், எதிர்காலத்தைக் குறித்தும் அநேகக் காரியங்களை இப்பொழுதும் அறிந்தவர்களாக இருக்கின்றோம்.

தேவ பிள்ளைகளே! 2 இராஜாக்கள் 2:14ல் குறிப்பிட்டுள்ளதாவது தேவனாகிய கர்த்தர் எலியாவை பரலோகத்திற்கு எடுத்துக் கொண்ட வேளையில் அவரின் சால்வையை எலிசா எடுத்து மேல் குறிப்பிட்டவாறு யோர்தானில் தண்ணீரை அடித்தவுடன் அது இருபக்கமாகப் பிரிந்தது என்றாகும். அங்கே காணப்படும் விஷேசத்துவம் என்னவெனில் எலியா பரலோகத்திற்கு ஏறிப் போகும் முன்னர் எலியா கூறியதாவது நான் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளும் முன்னமே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன என்று கேள் என்றார். எலிசா அதற்கு பிரதியுத்தரமாக உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன், ஏன்று கேட்ட வேளை எலியா தீர்க்கதரிசி "அரிதான காரியத்தைக் கேட்டாய் உன்னை விட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும். இல்லாவிட்டால் கிடையாது என்றார். தேவன் எலியாவை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்கையில் "சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனதை எலிசா கண்டு என வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன் பின்னர் எமது பிரதான வேதாகம வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி எலிசாவுக்குள்ளும் "தேவனின் வல்லமை" வெளிப்பட்டது.

தேவ பிள்ளைகளே! எலியா தீர்க்கதரிசி அற்புதங்கள் ஏழும் "எலிசா அற்புதங்கள் பத்தும்" செய்ததாக வேத வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எமக்கு தெளிவாகின்றது என்னவெனில் எலிசாவின் எதிர்பார்ப்பு தேவனிடமிருந்து கிடைத்தது என்பதே. ஆனாலும் அன்று எலிசாவிற்கு "இரட்டிப்பான ஆவியைக்" கொடுத்த தேவன் இன்று "பரிசுத்த ஆவியானவரை" எமக்குத் தந்தருளியிருக்கிறார். தேவன் "எங்களோடு கூட" தரித்து இருப்பாராக. எங்களுக்குள் "வாசம்" பண்ணுவாராக. ஆகையால் எலிசாவிற்கு போல் அல்லாது அதற்கு மேலான மகா அபிஷேகம் வல்லமையை உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் பொழிந்தருளுவாராக. ஆகையால் உங்கள் ஆசீர்வாதங்களுக்கு எல்லையில்லை. நீங்கள் பெலப்படுங்கள். தேவன் யோசனையில் பெரியவர், செய்கையில் வல்லமையானவர் என்பதால் உங்களுக்குள் பெரிய காரியங்களைச் செய்வார். உங்களை மற்றவர்களின் ஆசீர்வாதங்களுக்காக பாவிக்கப் போகின்றார். வெற்றிகரமான நாள்.



நீங்கள் வல்லமையான தேவன் நாங்கள் ஏதாகிலும் உங்களிடம் கேட்கும் போது அவைகளை எமக்கு பெற்றுத்தர வல்லவர். எனக்கு வல்லமையான ஆவியை தந்தருளும். எனது வாழ்க்கையில் இருக்கும் தடைகளை நீக்கும்படியாக ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன். யோவான் 14:18

ஜீவ மன்னா
ஜூன் 14
வெள்ளி

**செருபாபேலின் கரங்களிலே தூக்கு நூலைப் போல நாம் காணப்படுகின்றோம் !**

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம் 47 - 48

**"...அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார்."** (சகரியா 4:10)

இந்த காலை வேளையில் கர்த்தரோடு இணைந்திருக்கும் என் அன்பு தேவ பிள்ளைகளே! இன்றும் இயேசுவின் இனிமையான நாமத்தில் இனிமையான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன். தேவனின் புதிதான செய்தியை ஏந்திய வண்ணமாக உங்களைச் சந்திக்க கிடைத்தமையிட்டு தேவனுக்கே நன்றி செலுத்துகின்றேன். தேவனின் குமாரான இயேசுக்கிறிஸ்துவின் சீடர்கள் 12 போகளுக்கூடாக உலகிற்கு வெளிப்படுத்தப்பட்ட "நற்செய்தி" உலகெங்கிலும் பரவுவதற்கு காரணம் தேவனின் முடிவில்லாத கிருபையினாலும் தேவ அநுக்கிரகத்தினாலுமேயாகும்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஒரு போதும் என்னைக் கண்டிராவிடினும் என்னைக் குறித்து கேள்விப்படாவிட்டாலும் "ஜீவ மன்னா தின தியானங்கள்" உங்கள் கரங்களுக்குக் கிடைக்கச் செய்து நீங்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்து. ஆத்மீகத்திலும் முழுமைப்பெற்று உங்கள் சோர்வடைந்த ஆத்துமா மீண்டுமாக பெலன், புத்துணர்ச்சி பெறக் காரணம் யாரென்று சிறிது எண்ணிப் பாருங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் மாதந்தோறும் சரியான நேரத்திற்கு உங்களுக்கு "ஜீவ மன்னா" கிடைக்கச் செய்து இவையனைத்தையும் நேர்த்தியாக நடைமுறைப்படுத்துவது உங்கள் தேவனே தேவன் உங்கள் மீது அளவில்லா அன்பு கொண்டுள்ளார். மேற்குறிப்பிட்ட வசனமான சகரியா 4:10ல் தேவன் "கர்த்தருடைய" ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்கு நூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார்.

தேவ பிள்ளைகளே! சகரியா 4:10ல் "தூக்கு நூல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தூக்கு நூல் என்னும் உபகரணம் சரியான நேர் மட்டத்தைக் காட்டும். விஷேடமாக நாம் ஒரு கட்டிடத்தைக் கட்டும் வேளையில் பாவிக்கும் ஒரு உபகரணமாகும். அது செருபாபேல் கரத்தில் இருந்ததன் காரணம் "வீட்டின் அத்திவாரம் போடப்பட்டதன் காரணமாகவே இதைக் குறித்து ஆத்மீகமாக சிந்திக்கின்ற வேளை தேவன் எங்களைத் தேர்ந்தெடுத்தது நாங்கள் தேவனுக்குள் நிலைத்திருக்கும்படியாகவும், தேவனுக்குள் எங்களை கட்டியெழுப்பும்படியாகவும் என்பதை குறித்து தெளிவாகின்றது. தூக்கு நூலை யாரும் பாவிக்கும் வேளை அது தனது காரியத்தை நேர்த்தியாகவும், எப்பக்கமும் சாராத நடுநிலையில் செய்து முடிக்கும். ஆப்படியே நீதியுள்ள தேவனின் பிள்ளைகளாகிய நாம் நீதியுள்ளவர்களாக ஜீவிக்க வேண்டும். ஏனென்றால் என்னுடைய பிள்ளைகள் சத்தியத்தின் வழியிலே நடக்கின்றார்களென்பதை கேட்பதைத் தவிர வேறெந்த சந்தோஷமும் எனக்கு இல்லை என்று தேவனின் வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் நீதிமானாக ஜீவிப்பீர்களென்றால் உங்களுக்கு உதவி ஒத்தாசை செய்ய தேவன் உங்கள் பட்சத்திலிருக்கின்றார். நீங்களும் நீதிமானாக வாழ்வீர்களாக தேவன் உங்களைக் கண்டு சந்தோஷப்படுவாராக. இன்று வெற்றிகரமான நாள்.



என் தேவனே நீங்கள் நீதிமானாகிய தேவன் நீங்கள் நாம் ஏதாவதொன்றை கேட்கும் வேளையில் எங்களுக்குக் கிடைக்கச் செய்வீர் தேவனே இன்று நான் உங்களிடம் கேட்பது உங்கள் ஆவியானவர் எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்யும்படியாக என் வாழ்வில் ஏற்படும் தடைகளை நீக்கும் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

---

என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்;
கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். யோவான் 15:4

ஜீவ மன்னா

ஜூன் 15

சனி

## விண்ணப்பங்களின் ஆவியை மாம்சமான எம் மீது ஊற்றுகிற தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 49 - 50

**"நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; ..."** (சகரியா 12:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுவின் நாமத்தில் இனிய நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன். இவ்வுலகிலேயே அதி பெறுமதி வாய்ந்த புதையலைப் போன்ற ஜீவனுள்ள தேவனின் ஜீவனைக் கொடுக்கின்ற வல்லமையான கூர்மையான பட்டயத்தைப் பார்க்கிலும் ஊடுருவிக் செல்கின்ற, சரீரத்தில் பலவீனமான ஏலும்புகள், அதை செயலற்ற அவயவங்கள் அனைத்தும் உயிர் பெற்று புது ஜீவனை, புத்துயிர் அளிக்கும் எமது உள்ளார்ந்த சிந்தைனைகள் கருத்துக்களை விசாரிக்கும் தேவனுடைய வசனங்களுக்கூடாக ஒவ்வொரு நாளிலும் காலைப் பொழுதினில் நான் உங்களைச் சந்திப்பது பெரும் பாக்கியமாகும். அப்படியே ஜீவ மன்னா தின தியான வாசகராகிய நீங்களும் அதிர்ஷ்டக்காரரே.

தேவ பிள்ளைகளே! எங்களுக்குக் கிடைக்கும் மன்னா விமர்சனக் கடிதங்களில் உங்களில் பெரும்பாலானோர் கூறுவது ஆவிக்குரிய ஆலோசனைகளைப் பெற்றுள்ளோம் என்பதே. ஆனாலும் என்னுடைய அறிவானது உங்களைனைவரதும் அறிவாற்றலைவிட அதிகமானது எனக் கூறவில்லை ஏசாயா 45:4 இவ் தேவனின் வசனங்கள் புதையல் எனக் கூறியிருப்பதனால் படித்தவர்களற் படிக்காதவர்கள் யாராக இருப்பினும் தேவனுடைய வசனத்திற்கு வாஞ்சையாக இருப்பேன். தாகமாய் இருப்போர் அனைவருக்கும் தேவன் ஆவியானவருக் கூடாக விலைமதிக்கவே முடியாத கருத்துக்களை, தேவன் சொல்லித் தருவார் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக தேவ பிள்ளைகளே இன்றைய நாளில் தேவன் உங்களுக்கு கூறுவதாவது உங்களுக்கு விண்ணப்பத்தின் ஆவியை ஊற்றுவேன் என்பதாகும் என்னவெனில் நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன் என்று சகரியா 12:10ல் எழுதப்பட்டுள்ளது. விண்ணப்பங்களின் ஆவியானவர் என்று அழைக்கப்படுபவர். தேவனாகிய பரலோகப் பிதாவுக்கு சீரான முறையில் ஜெபிக்க எங்களை வழிநடத்தும், கற்றுக் கொடுக்கும் ஆவியானவராவர்.

தேவ பிள்ளைகளே! மத்தேயு புத்தகத்திலே குறிப்பிடப்பட்டுள்ளதாவது நாம் ஜெபிக்கின்ற வேளையில் மத்தேயு 6:6.7ம் வசனங்களில் அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலம்பாதேயுங்கள் அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள் என்று எழுதப்பட்டுள்ளது அங்கே இயேசுகிறிஸ்து எமக்குக் கூறுவது நாம் முழு இருதயத்தோடும் கருத்தோடும் ஆவியோடும் ஜெபிக்க வேண்டும் என்பதாகும். உங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் அதிகமாக நேசிப்பதனால் அவர் விண்ணப்பத்தின் ஆவியில் நிறைந்து ஜெபிக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து எங்களுக்குக் கற்றுக் கொடுப்பாராக ரோமர் 8:26ல் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் என எழுதப்பட்டுள்ளது தேவ பிதாவானவரிடம் எமது இயேசுகிறிஸ்துவானவர் உங்களுக்கு அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தருவாராக இன்றைய நாள் வெற்றிகரமான நாள்.



என் தேவனே நீங்கள் வல்லமையானவர். நீங்கள் எனக்குக் கொடுத்த உங்கள் பரிசுத்த ஆவியானவருக்கு ஸ்தோத்திரம். நீங்கள் எனக்கு விண்ணப்பத்தின் ஆவியானவரை என்னில் ஊற்றி ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

---

நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து,
உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும்,
மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்;
அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவேல் 2:13

ஜீவ மன்னா

ஜூன் 16

ஞாயிறு

## தீங்கு நாளில் என்னைத் தமது கூடாரத்தில் மறைத்துக் கொள்ளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 01 - 02

**"தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து,..."** (சங்கீதம் 27:5)

அருமையான தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளே! இன்றைய நாள் உங்களுக்கு "நன்மையிலும், தேவ கிருபையிலும்" நிறைந்திருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். இவ்வுலகில் வாழ்கின்ற சில மனிதர்களுக்கு "நாளைய நாளைக் குறித்து எந்தவித எதிர்பார்ப்புமில்லை." அவர்கள் எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்று அறியாதவர்களாக இருக்கின்றார்கள். ஆனாலும் இயேசு ஜீவிக்கின்றார் என அவரைக் குறித்து அறிந்த அவருடைய பிள்ளைகளாக இருக்கும் நாங்கள் எங்கள் எதிர்க்காலத்தைக் குறித்து மாத்திரமல்ல, எங்கள் ஆத்துமாவைக் குறித்து எல்லாவற்றையும் அறிந்து கொண்டுள்ளமையால் நாங்கள் அதிகமாக "ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" ஆவோம்.

தேவ பிள்ளைகளே! மேற் குறிப்பிட்ட சங்கீதம் 27:5ல் "தீங்கு நாளில் தேவன் தமது கூடாரத்தில் மறைத்துக் கொள்வேன்" என்று எழுதியுள்ளார். அது எவ்வளவு அருமையானது? அப்படியானால் தேவனைக் குறித்து பயமுள்ளவர்கள், அவரது இரக்கத்தை எதிர்ப்பார்த்து இருப்பவர்களின் ஆத்துமாவை மரணத்தினின்று காப்பாற்றும்படியாகவும், கொடிய பஞ்சத்தின் போது அவர்களுடைய வாழ்க்கையை காப்பாற்றும்படி தேவனின் கண்கள் அவர்களை நோக்கிய வண்ணமாக இருப்பது "உண்மையாகும்." ஏனெனில் உங்களுக்கு ஏதாகிலும் ஆபத்து, பிரச்சினைகள் ஏற்படின் அப்படியான நேரங்களில் ஏதாவதொரு "அறிகுறி" தென்படும் போது "உடனே" தேவன் தனது "மறைவிடங்களில்" எம்மை வைத்து "பாதுகாத்துக்" கொள்வார். மனிதர்களாகிய எங்களுக்கு ஆபத்து நேரிடுவது எத்தைகைய சந்தர்ப்பங்களென்றும், அது எப்படி நேரிடும் என்றும் எமக்குத் தெரியாது. ஆனால் தேவன் யாவற்றையும் அறிவார். அவைகள் எம்மை நோக்கி வருமுன்னரே தேவனுக்கு அவைகளை "நிறுத்த முடியும்." "தேவன் கட்டளையிடாத போது ஏதாவதொன்று நிகழுமெனக் கூறுவது யார்" என்று தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளமையால் தேவனுடைய அனுமதியின்றி ஒன்றுமே நடைபெறாது அதனை நீங்கள் விசுவாசியுங்கள்.

தேவ பிள்ளைகளே! தேவன் எங்களை ஆவியில் பெலப்படுத்தும் முகமாக, ஆவியில் எம்மை கரை சேர்க்கும்படியாக, ஆபத்து எம்மை நோக்கிவர அனுமதி கொடுக்க முடியும். ஆனாலும் அங்கே அது ஒரு அநுபவமாக அமையுமேயல்லாமல். எம்மை அழிந்து போகச் செய்யாது. எங்கள் ஆபத்து நேரங்களில் தேவன் எம்மோடிருந்து எம்மைக் காத்துக்கொள்வார். ஏனென்றால் "நான் உபத்திரவத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்.இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்" என்று சங்கீதம் 119:67ல் எழுதப்பட்டுள்ளது. அதன் காரணமாகவேயாகும். ஆகையால் உங்கள் தேவனாகிய "கர்த்தர் தம்முடைய கூடாரத்தில் மறைத்து" வைப்பதால் உங்களுக்கு எவ்வித "தீங்கும்" ஏற்படாது. அப்படியானால் தேவன் என்றும் உங்களோடு. உங்களுக்கும் "வெற்றியின்" நாள்.



என் பிதாவே! நீங்கள் ஆபத்து நாளில் உங்கள் கூடார மறைவில் வைத்திருக்கும் தேவன். நீங்களே என் தேவன் என்பதால் நான் உங்களது சொந்த பிள்ளையாதலால் நீங்கள் என்னை பாதுகாப்பதால் உங்களுக்கு நன்றி. இன்றும் என்னை காத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ ஆமென்~

---

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு;
நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். சங்கீதம் 50:15

ஜீவ மன்னா

ஜூன் 17

திங்கள்

## உங்கள் விரோதி யார் ?

இன்றைய வேதவாசிப்பு


யாத்திராகமம் 03 - 04

**"அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை எனக்குக் காண்பித்தார்; அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான்; சாத்தான் அவனுக்கு விரோதஞ்செய்ய அவன் வலது பக்கத்திலே நின்றான்."** (சகரியா 3:1)

அநாதி சிநேகத்தால் எம்மை நேசிக்கிறவரும் காருண்யத்தினால் எம்மை இழுத்துக் கொண்டவருமான எமது பரலோக தகப்பனுடைய அநுக்கிரகத்தோடு பெற்றுக் கொள்ளும் இந்த புதிய நாளிலும் இந்தக் காலைப்பொழுதில் இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். எம்மை சிருஷ்டித்த கர்த்தர் கர்ப்பத்தில் உருவாக்கும் போதே எமக்கு ஒரு வல்லமையைக் கொடுத்துள்ளார். அந்த வல்லமை ஒரு எல்லைக்கு உற்பட்டதாகவே இருக்கிறது. ஏனெனில் படைப்பின் தேவனின் பிள்ளைகளாக நாம் இருப்பதால், நாம் அவருடைய கட்டளைகளுக்கு அடங்கி நடப்பவர்களாகவும், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிவுள்ளவர்களாய் அவருடைய நியமங்களைக் காத்து அவருக்கு முன்பாக பணிவுடன் ஜீவிக்கிறவர்களாக விளங்க வேண்டும் என அவர் தம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். ஆகையால் மனிதர்களாகிய நாங்கள் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டாலும், அவர் கொடுத்த அந்த குறிப்பிட்ட வல்லமையில் மாத்திரமே செயல்பட முடியும். அதற்கு மேலாக எம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

தேவ பிள்ளைகளே! எமது தெய்வம் சர்வ வல்லமை பொருந்தியவராக விளங்குகிறார். அவரால் முடியாதது ஒன்றுமில்லை. சர்வ பராக்கிரமத்தின் தேவன் தமத சுயவிருப்பத்தின்படி எம்மை தெரிந்துக் கொண்டு அவரது சொந்தப் பிள்ளையாக மாற்றினார் என்பது தேவனுடைய வசனத்தின்படி தெளிவாகியுள்ளது. ஆகவே உங்கள் மீது வைத்திருக்கும் அன்பே முதற் காரணம். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக. தேவன் உங்கள் வாழ்வின் சகல நன்மையான காரியங்களையும் நிறைவேற்றி அவர் வல்லமையாக கிரியை செய்கிற தேவனாக இருக்கிறார். இன்றைய இதழின் ஆரம்ப வசனம் முக்கியமான ஒரு காரியத்தை வலியுறுத்துகிறது. பிரதான ஆசாரியனாகிய யோசுவா கர்த்தருக்கு முன்பாய் நின்றான். சாத்தான் அவனுக்கு விரோதமாக நின்றான் என்று வேத வசனம் குறிப்பிடுகின்றது. ஆகவே உத்தம தாசனாகிய யோசுவாவுக்கு முன்பதாக சாத்தான் எதிர்த்து நிற்கக் கூடுமானால் நாம் எம்மாத்திரம் என சிந்தித்துப் பாருங்கள். யோசுவாவுக்கு விரோதமாக மாத்திரமல்ல. சத்துருவானவன் நாம் ஒவ்வொருவருக்கும் விரோதமாக எம் அருகில் இருக்கிறான் என்பதை நன்கு புரிந்துக் கொள்ளுங்கள். ஆயினும் அதைரியப்படவேண்டாம். ஏனெனில் அதே வசனத்தில் நாம் ஒவ்வொருக்கும் தேவன் தேவ தூதனை நியமித்திருக்கிறார். எமக்கு துணை நின்று எமக்கு பணிவிடை செய்யும்படியாக எனவே அவ் தேவ தூதர்கள் எப்போதும் எம் அருகிலே இருக்கிறார்கள் என வேத வசனம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஆகவே நீங்கள் தைரியமாகவிருங்கள்.

அன்புப் பிள்ளைகளே! பயப்படாதீர்கள் சகல வழிகளிலும் எம்மைக் காக்க தேவதூதர்கள் எம்மோடிருக்கிறார்கள். எம்மை பாதுகாக்கும்படி தேவன் அவர்களுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார். இன்னும் சில வார்த்தைகளை நாம் சற்று அவதானித்தோமானால் தேவன் எதிராளியான சாத்தானுக்கு கட்டளையிடுவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. ஆகவே உங்களுடைய வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபத்திலே உறுதியாகத் தரித்திருங்கள். அப்போது அவர் உங்களை விடுவித்துக் காத்துக் கொள்வார்.



என் அன்புத் தகப்பனே! எனக்கு ஒத்தாசை செய்யும்படி ஏற்படுத்தியுள்ள தேவ தூதனுக்காக ஸ்தோத்திரம். இன்றைய நாளிலும் என் ஆத்மீக, லௌகீக காரியங்கள் என் எதிரியான சாத்தான் கொண்டுவரும் சோதனைகளில் எனக்கு ஜெயத்தை தரும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளி. 12:9

ஜீவ மன்னா

ஜூன் 18

செவ்வாய்

# சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை எமக்குத் தந்த தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 05 - 06

**"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்;..."** (யோவேல் 2:28)

தேவனுக்குள் அருமையாகப் கிடைக்க மிகுந்த கிருபையுள்ள மகா உன்னதமான தேவனின் அன்பு மிகு தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு நல்ல நாளாக வேண்டுமென பிரார்த்திக்கிறேன். சர்வ வல்லமையுள்ள தேவ பிதாவானவரின் தேவ ஆவியைப் பெற வரப்பிரசாதத்தைப் பெற்ற நாங்கள் மிகவும் அதிர்ஷ்டக்காரர்கள். ஏனென்றால் தேவனின் தேவ ஆவியை நீங்கள் பெற்றுக் கொண்டது நீங்கள் அவரை அழைத்ததினால் அல்ல அவரின் சொந்த விருப்பத்தில் உங்களைத் தெரிந்தெடுத்தினாலாகும்.

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவபிதாவானவர் உங்களை மிகவும் நேசிக்கின்றார். ஆகையாலேயே உங்களை பாவத்தில் மீட்டு, உங்கள் வாழ்வை புதுப்பித்து உங்களை ஆசீர்வதிக்கும்படியாக தேவனின் திருக்குமாரனான இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். பிதாவானவரின் விருப்பத்தின்படி எங்களுக்காக தன் உயிரைக் கொடுக்க மனித உருவெடுத்து அவனியில் பிறந்த இயேசு சுவாமி சிலுவையிலே ஜீவனைப் பலியாகக் கொடுக்க முன்னரே தனது சீடர்களிடம் இயேசு உரைத்தாவது "உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். உங்களிடம் வருவேன்" என்றாகும். அதன் கருத்து அவர் தேவனிடமிருந்த வருகின்ற தேவனின் "தேவ ஆவியானவரை." எங்களுக்கு வெளிப்படுத்தினார் என்பதேயாகும். பரிசுத்த யோவான் 16:7ல் நான் உங்களுக்குச் உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் என்று. எங்களுக்கு இயேசுகிறிஸ்து எங்களுக்கு வெளிப்படுத்துவது பிதாவானவரிடமிருந்து வருகின்ற பரிசுத்த தேவ ஆவியானவரைக் குறித்தாகும்.

தேவ பிள்ளைகளே, பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால். அவனிடத்தில் நான் பரவேசித்து போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். என்று எழுதப்பட்டுள்ளமையால் நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் போது தேவனுக்கு உங்கள் இருதயத்தைத் திறக்கும் போது உடனடியாக உங்கள் தேவனானவர் "தூய ஆவியாக" உங்கள் உள்ளத்தில் இறங்குவார். "உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக" உங்கள் தகுதியைக் குறித்து பாராமல் உங்கள் வாழ்வின் நீதியைக் குறித்து பாராமல் தேவன் உங்களைத் தெரிந்துக் கொண்டார். நீங்கள் இப்பொழுதும் தேவனின் சொந்த பிள்ளையாக இருப்பது தேவன் உங்களைத் தெரிந்துக் கொண்டமையினாலேயேயாகும். நீங்கள் தைரியமாயிருங்கள். தேவனானவர் உங்களை அதிகமாக நேசிக்கின்றார். பரலோகப் பிதாவானவரின் தேவ ஆவியை உங்களுக்குக் கொடுப்பது செயலல்ல என்பதும். அது தேவ சித்தமே என்பதையும் தெளிவாகப் புரிந்துக் கொள்ளுங்கள்.இன்றைய நாள் வெற்றிகரமான நாள்.



என் தேவனே நீங்கள் அதிக வல்லமை நிறைந்தவர். நீங்கள் பிதாவானவரின் திருக்குமாரன். தூய ஆவியனவராக வெளிப்படுகிறீர்களா! தேவனே உங்கள் ஆவியை என்மேல் ஊற்றி உங்கள் வல்லமையால் என்னை நிரப்புங்கள். இயேசுவின் நாமத்தில். ~ ஆமென்~

---

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும்.
இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது;
அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால்,
நீங்கள் அவரை அறிவீர்கள். யோவான் 14:17

ஜீவ மன்னா

ஜூன் 19

புதன்

**கர்த்தராகிய கன்மலையே எமது உயர்ந்த அடைக்கலம் !**

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 07 - 08

**"...என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்."** (சங்கீதம் 18:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். நாங்கள் அறிந்து கொண்ட அளவில், நாங்கள் வாழுகின்ற பிரதேசத்திலே நன்றாக கல்வி கற்ற ஞானவான்கள், அறிவாளிகள் ஆகியோரும் ஜீவிக்கின்றார்கள். அவர்கள் எல்லாவற்றையும் செய்து முடிக்கத்தக்க அறிவாற்றலைப் பெற்றிருக்கிறார்கள். ஆயினும் தம்மை தாயின் கர்ப்பத்தில் உருவாக்கிய தேவன் யார் என்று அவர்கள் அறியாதிருக்கின்றார்கள். அவர்கள் வசமிருக்கும் அறிவு, ஆற்றல், புத்தி சாதூரியம் அனைத்தும் அவர்கள் "உயிரோடு" இணைந்திருப்பதை புரிந்துக் கொள்ளாமலிருக்கின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் மிகவும் "அதிர்ஷ்டக்காரர்களாவோம்." ஏனென்றால் "எமது உயிரை எடுக்கவும், மீண்டுமாக நமக்கு அதை பெற்றுத்தரவும்" வல்லமையான படைப்பின் தேவன் எங்கள் தேவன் என்பதை ஏற்றுக்கொண்டு நாங்கள் ஜீவிக்கின்றோம். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக. உங்கள் தாய் தந்தையைப் பார்க்கிலும் தேவன் உங்களை மிகவும் நேசிக்கின்றார். நீங்கள் அதை அறிவீர்களா? என்னுடைய 29 வருட ஆத்துமீக பயணத்தில் தேவனது அன்பு எவ்வளவு ஆழமானது, அளவிட முடியாதது என்பதை நான் மிகவும் ருசித்துப் பார்த்துள்ளேன். அந்தக் காலப்பகுதியில் தேவன் என்னை மறந்து கைவிடவில்லை. தேவனது வசனம் கூறுகின்றது. சகரியா 2:8ல் எம்மை கண்ணின் கருமணியைப் போல் பாதுகாப்பேன் என்பதாகும்.ஆகையால் அதை எனக்கு தைரியமாக எழுதி வெளியிட முடியும் என்பதனை ஆணித்தரமாக கூறுகின்றேன். இன்றைய தின இதழில் எனக்கு குறிப்பிட முடியாத, இடங்காணாத அநேக அனுபவங்களைப் பெற்றுள்ளேன். என்பதனையும் உங்களுக்கு அறியத்தருகிறேன்.

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட சங்கீதம் 18:2ல் உங்களுக்கு சொல்லப்படுகிறதாவது "தேவனே உங்களது வல்லமையான கன்மலை." அதன் விளக்கம் என்னவெனில் அவரே உங்கள் கன்மலையான தேவன் என்பதால் தேவன் எமது எல்லா உபத்திரவங்கள், பிரச்சினைகள், துன்பங்கள் ஆகியவற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வேன் என்று உரைக்கின்றார் அல்லவா? இந்த உலக துன்பங்கள், பலவிதமான சிக்கல்களில் பிரச்சினைகளில் உலகில் ஜீவிக்கின்ற சாதாரன மனிதன் அழிந்து போகின்றான். ஆனால் தேவன் எம்மோடு இருப்பதால் எங்களுக்கு அவ்வண்ணமான விபத்துக்கள், அழிவுகள், ஏற்படுவதில்லை. ஏனென்றால் உங்களுக்கு பாதுகாப்பு, கிடைப்பது சர்வ வல்ல பராக்கிம, கன்மலையான சதாகாலமும் மாறாத ஒரே தேவனாலேயே ஆகும். இன்றைய நாளில் தேவன் உங்களைப் பாதுகாத்து உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் முழு மனதோடு விசுவாசித்துக் கொண்டிருங்கள். இன்றைய நாள் வெற்றியின் நாள்.



என் தேவனே! நீங்கள் என் பெலனான கன்மலை. நீங்கள் என்னோடிருப்பதனால் எந்தவிதமான ஆபத்தும் என்னை அணுகுவதில்லை. நான் உங்களுக்குள் மறைந்திருக்கிறேன். நீங்கள் என்னை அன்போடு அரவணையுங்கள். காத்துக் கொள்ளுங்கள்.இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார். ஏசாயா 26:4

ஜீவ மன்னா

ஜூன் 20

வியாழன்

# இயேசுவின் இரத்தம் பாவங்களைக் கழுவிப் பரிசுத்தமாக்கும் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 09 - 10

**“அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.”** (சகரியா 13:1)

தேவ சமாதானத்தில் நிரம்பியிருக்கும் எனது அருமை தேவ ஜனங்களே! இன்றைய நாள் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் “மகிழ்ச்சிகரமான நாளாக” வேண்டுமென வாழ்த்துகின்றேன். பாவத்தில் நிறைந்த இவ்வுலகில் இருளினின்று, வெளிச்சத்திற்கு வரமுடியாமல் தத்தளிக்கும் மக்களிடையே, உங்களுக்கு இயேசுகிறிஸ்துவை அறிந்து கொள்ளவும், அவருக்குள்ளே பாவ மன்னிப்பு இருக்கின்றது என்பதையும், இருள் நிறைந்த உலகில் எங்களது ஒரே ஒளி இயேசுவே என்பதையும் தெரிந்து கொண்டு அவரை நெருங்கிக் கிட்டிச்சேர “வரப்பிரசாதம்” பெற்ற நீங்கள் “உண்மையில் அதிர்ஷ்டக்காரர்கள்.”

தேவ பிள்ளைகளே! நீங்கள் பூமியில் ஜீவிக்கின்றபடியால் நீங்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்னர் உங்களுக்கு உதவி, உபகாரம் புரிந்தது உங்களைப் போன்றதொரு மனிதனே. ஆனாலும் தேவனான இயேசுகிறிஸ்துவை அறிந்த பின்னர் உங்களுக்கு உதவி, உபகாரம் கிடைப்பது “வானத்தையும், பூமியையும் படைத்த தேவனிடமிருந்தே.” ஏனெனில் சங்கீதம் 121:1,2ல் சங்கீதக்காரன் கூறுவது பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் “எனக்கு ஒத்தாசை எங்கே கிடைக்கும் என்றும் எனக்கு ஒத்தாசை கிடைப்பது வானத்தையும், பூமியையும் படைத்த தேவனிடமிருந்து என்றாகும். ஆகையால் இன்றைய நாளில் உங்களுக்கு எல்லா ஒத்தாசையும் கிடைப்பது உங்கள் தேவனான இயேசுக்கிறிஸ்துவிடமிருந்தேயாகும்.” ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! மனிதனது ஜீவியத்தில் தேவன் வைத்திருக்கும் அருமையான திட்டத்தை தடையாக்குவது அவனுக்குள் இருக்கும் “பாவமேயாகும்.” இன்றைய நாளில் பிரதானமான வேதாகம வசனத்தின் கருத்து வெளிப்பாடு என்னவெனில் அந்த நாளிலே பாவத்தையும், அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும், எருசலேமின் வாசிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உருவாயிருக்கும் என்பதே. அது அதிவிஷேடமான ஊற்று எல்லாப் பாவங்களும், அசுத்தங்களும் அந்த ஊற்றினால் கழுவப்படும் என்பதேயாகும்.

தேவ பிள்ளைகளே! இந்த ஊற்று என்ன? என்று நீங்கள் சிந்தித்து பாருங்கள். தேவனின் திருக்குமாரனான இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவங்களையும் கழுவி எங்களை பரிசுத்தமாக்கும் என்று 1 யோவான் 1:7ல் எழுதப்பட்டுள்ளமையால் அந்த நீரூற்று எங்கள் இயேசுக்கிறிஸ்து இரத்தம் என்பது தெளிவாகின்றது. இன்றைய நாளினில் உங்கள் பரிசுத்தத்திற்கு தேவனுடைய இரத்தம் போதுமானதாக விருக்கின்றது. நம்முடைய இயேசுகிறிஸ்து நமது பாவங்களுக்கு “விலைக்கிரயம்” செலுத்துவதற்கு இவ்வுலகிற்கு வந்தார். அத்தோடு சிலுவையிலே உயிரைப் பலியாக எமக்காக ஒப்புக் கொடுத்து, தண்டனையை அவர் தனியாகச் சுமந்து எமது பாவங்களை அவர் சிந்திய பரிசுத்த இரத்தத்தினால் கழுவி, எமக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தாரென்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களானால் மாத்திரமே உங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும் உங்களை தேவன் எல்லையில்லாத அன்பால் அரவணைத்து வழிநடத்திச் செல்கிறார். இன்று வெற்றியின் நாள்.



என்னுடைய தேவனே உங்கள் குமாரனான இயேசுவுக்கு ஸ்தோத்திரம். தேவனுடைய இரத்தம் எமது பாவ அழுக்கை கழுவி எம்மை பரிசுத்தப்படுத்தும் நீரூற்று தேவனின் விலைமதிக்க முடியாத இரத்தத்திற் கூடாக என் பாவத்தை கழுவி பரிசுத்தப்படுத்தியமையால் நன்றி கூறுகின்றேன். ~ஆமென்~

---

ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து,
அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக,
புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். எபிரெயர் 9:15

ஜீவ மன்னா

ஜூன் 21

வெள்ளி

**கர்த்தரின் பரிசுத்த நாமத்தை தியானிக்கறவர்களின் ஞாபக புத்தகம் !**

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 11 - 12

**"...கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது."** (மல்கியா 3:16)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மனுஷரின் மத்தியில் வாசம் பண்ணுகிறவரும் எம்மை ஆசீர்வதித்து எம் மத்தியில் உலாவுகிறவருடைய ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். தேவ அநுக்கிரகத்தோடு தாங்கள் ஆரம்பிக்கும் இந்நாள் நல்ல நாளாக விளங்கும்படி பிரார்த்திக்கின்றேன். தேவன் அருபியாய் எம் மத்தியில் வாசம் பண்ணுகிறவராயிருந்தாலும். அவர் எம் மத்தியில் செய்யும் அதிசயமான, அற்புதமான, பிரமிக்கத்தக்கதான, ஆச்சரியப்படத்தக்கதான காரியங்களை செயல்படுகிறபடியால் நாம் அதை கண்டு உணாந்து பார்த்து கேட்கும் சாட்சிகள் மூலம் அவர் ஜீவனுள்ள தேவனாக எம் மத்தியில் இருக்கிறார் என்பது வெளிப்படையாக தெளிவாகின்றது. இப்படி அவர் 'எம் மத்தியில் ஜீவனுள்ளவராய் இல்லாவிட்டால் மனிதர்களாகிய நாங்கள் அவரை நோக்கி முறையிட்டு விண்ணப்பங்களை ஏறெடுக்கும் போது எமக்கு பதிலளித்து அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களைச் செய்வது எப்படியென்று நாம் சற்று சிந்திக்கக்கடவோம்.

தேவனுடையவர்களே! உயிருள்ள, ஜீவிக்கின்ற தேவனை குறித்து அறிந்த யாவரும் பேறு பெற்றவர்களாக இருக்கிறோம். காண்கின்றவைகளைக் குறித்து விசுவாசிப்பது மிக இலகுவான காரியம். ஆனால் காணாத அருபியாய் இருக்கின்ற தேவனை மழு உள்ளத்தோடு விசுவாசித்து அவர் மூலமாக விண்ணப்பத்திற்கு பதிலை,விடுதலையை, ஒத்தாசையைப் பெற்றுக் கொள்வது நீங்கள் பெற்றுக் கொண்ட மிக அருமையான வரப்பிரசாதமாக இருக்கின்றது. தேவ நாமத்தை அறிந்தவர்கள் யாவரும் வெற்றிப் பெற்றவர்களே, அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமேயில்லாதபடியால், உங்கள் வாழ்க்கையின் தேவைகள் யாவற்றையும் ஏற்ற வேளையில் ஏற்றவைகளை அவரால் செய்ய முடியும் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். இவ் இதழின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட தேவ வார்த்தை அவருடைய நாமத்தை தியானிக்கிறவர்களுக்காக ஞாபகப் புத்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது என்று கூறுகிறது. ஆகையால் அவருடைய பரிசுத்த நாமத்தை தியானித்து, இப் புத்தகத்தில் நாமும் இடம் பெறுவோம்.

தேவ பிள்ளைகளே! வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஜீவ வாத்தைகள் இறைவனின் வெளிப்பாடுகளை வாசித்து அவைகளைக் குறித்து தியானிக்கும் போது பரிசுத்த ஆவியானவருக்கூடாக அர்த்தங்களை விளக்கங்களை கற்றறிந்துக் கொள்ளலாம் அவருடைய அன்பு, கிருபை, தயவு இவைகளைச் குறித்தும் தியானித்து ஆவியினால் நிறைந்து அதிக அதிகமாக தேவனை கிட்டிச்சேர முடியும்.ஆவியானவரும் உங்களை அன்பிலும் அறிவிலும் நிரப்பி உங்களை ஆட்கொண்டு அரவனைத்துக் கொள்வார். மல்கியா 3:16ல் அவருடைய ஜீவனுள்ள நாமத்தை எந்நேரமும் அறிக்கைப்பண்ணி தியானம் செய்து அவருடைய ஞாபக புத்தகத்தில் உங்கள் பெயரையும் உங்கள் செயல்களின் நன்மை தீமைகளையும் இப் புத்தகத்தில் அவர் பதிவு செய்கிறார். ஏன்பதை உணர்ந்து மிக அவதானத்தோடு செயலப்படுங்கள். உங்களுக்கு இன்று வெற்றியின் நாளாக அமையட்டும்.



நேசத் தகப்பனே வல்லமையான ஜீவனுள்ள நாமத்தை உடையவரே உங்கள் நாமத்தை தியானிக்கிறவர்களின் நாமங்கள் ஞாபக புத்தகத்தில் பதிவு செய்பவரே நானும் உங்கள் மகிமையின் நாமத்தை தியானித்து உங்கள் ஞாபக புத்தகத்தில் இடம் பெற வல்லமை அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

எல்லா ஜாதிகளுக்கும் விரோதமான நாளாகிய கர்த்தருடைய நாள் சமீபமாய் வந்திருக்கிறது;
நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்;
உன் செய்கையின் பலன் உன் தலையின்மேல்திரும்பும். ஒபதியா 1:15

ஜீவ மன்னா
ஜூன் 22
சனி

## உங்களைத் தனக்கென்று உருவாக்கிய தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம்
13 - 14

**"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்."** (ஏசாயா 43:21)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் "இன்று ஒப்பற்ற மனமகிழ்ச்சியின் நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். முழு உலகினையும் நாம் அவதானத்தோடு நோக்கும்போது அது மிகவும் ஆச்சரியமிக்கது. அதன் காரியங்கள் அற்புத வண்ணமாக நடைபெறுகின்றதென்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகையால் முழு உலகினையும் படைத்து நிர்வகிக்கும் சர்வ வல்லமை படைத்த தேவனின் வசனங்களின்படி ஜீவிக்கின்ற, அவரை அறிகின்ற அறிவை விருத்தி செய்து கொள்ளும்படியாக தின மன்னா தியானங்கள் வாசிக்கும் நீங்கள் "ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்."

தேவ பிள்ளைகளே! மனிதர்களாக இப்பூமியில் பிறந்த நாமனைவரும் பரம்பரை பாவங்களின் சாபங்களின் விளைவாக எமது சொந்த பாவங்கள், பற்பல பிழைகளின் காரணமாக எங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் குழப்பங்கள் நிறைந்திருந்தது. திக்கற்றவர்களாக, நோயுற்றவர்களாகக் காணப்பட்டோம். அவ் வேளையில் பரலோகப் பிதாவின் திருக்குமாரனான இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள், சாபங்களின்று விடுதலைப் பெற்றோம். "ஏசாயா 43:21ல் குறிப்பிடப்படுகின்றதாவது "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்றாகும். அதன் கருத்து என்னவெனில் ஆண்டவரின் சொந்த ஜனங்களென்றும், தேவனுடைய தேவ ஆவியை எமக்குக் கொடுத்து தேவனுக்கென்று மீண்டுமாக ஆவியில் பிறப்பைக் கொண்டமையே ஆகும். பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி நீங்களும் நானும் தேவ ஆவியானவருக் கூடாக "மறு பிறப்பு" பெற்றுள்ளமையால் ஆத்மீகர்கள் என்று அறிந்து கொள்ளப்படுகின்றோம். எப்படியாயினும் "மாம்சத்தில் பிறப்பது மாம்சமாகும். ஆவியில் பிறப்பது ஆவிக்குரியவைகளாகும்." என்று எழுதப்பட்டுள்ளமையால் நாமும் அப்படியே இருக்கின்றோம்.

தேவ பிள்ளைகளே! எங்கள் இயேசுக்கிறிஸ்து எங்களைப் படைத்தவரென்று "ஏற்றுக்கொண்டு" அவருடைய நாமத்தின் பேரில் "விசுவாசம்" வைத்துள்ளமையால் தேவனின் பிள்ளைகளாவதற்கு தேவன் அதிகாரம் கொடுத்துள்ளார். ஆனாலும் அது அப்படி நிகழ்வது தேவனுடைய விருப்பத்தின் பேரிலேயாகும் ஏனென்றால் அவர்கள் இரத்தத்தில், மாம்சத்தின் விருப்பத்தின் பேரிலோ, மனிதனின் விருப்பத்தின் பேரிலோ அல்லாமல் தேவனிடத்தில் பிறந்தவர்கள் என்று வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் எங்களைத் தேவன் அவருக்கென்று மீண்டுமாக உருவாக்கி, எமக்கு ஆவியில் மறுபிறப்பை ஏற்படுத்தியது இதில் தெளிவாகின்றது. உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! தேவன் உங்கள் வாழ்க்கை சம்பந்தமாக, உங்கள் உயிர் உங்கள் ஆவி சம்பந்தமாக எல்லாக் காரியங்களையும் அதி விஷேசித்த பொறுப்பாக ஏற்றுக்கொண்டுள்ளார். தேவனின் அருமையான சித்தமானது உங்களுக்குள் செயலாற்றுவதை நினைத்து சந்தோஷத்துடன் இருங்கள். இன்றும் உங்களுக்கோர் மனமகிழ்ச்சியின் நாள்.



நீங்கள் என்னை உங்களுக்கென்று ஆவியில் மறுப்பிறப்படையச் செய்துள்ளமையால் ஸ்தோத்திரம். உங்கள் தேவ ஆவியானவர் மூலம் எனது ஆத்துமாவை நீங்கள் மீண்டும் பிறக்கச் செய்தீர்கள். நான் உங்களுக்கே சொந்தம். நான் உங்களைத் துதிக்க என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை;
அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே
ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள். ஏசாயா 65:23

ஜீவ மன்னா
ஜூன் 23
ஞாயிறு

## அசட்டை பண்ணுகிறவர்களுக்காக தேவ சமூகத்தில் விண்ணப்பம் செய்வோம்!


இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம் 15 - 16

**"...என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான் என்றார்."** (லூக்கா 10:16)

அன்பார்ந்தவர்களே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவினால் பாக்கியவான்களாக இருக்கும்படி அழைக்கப்பட்டவர்களே, இன்றும் உங்களுக்கோர் ஆசீர்வாதத்தின் நாள். அதிகாலையில் கண்விழித்து நாளை ஆரம்பிக்கும் பொருட்டு நிகரில்லா தெய்வம் இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் ஜெபித்து இன்றைய தினத்தின் சகல காரியங்களையும் ஒப்புக் கொடுத்து. தேவனின் வழிநடத்தலோடு ஆரம்பிக்கும் எல்லா வேலைகளையும் தேவன் ஆசீர்வதித்து வெற்றிகரமாக செய்து முடிப்பார். மண்ணையும் விணணையும் உருவாக்கி ஆளுகை செய்யும் தேவன் தம் கரங்களினால் உங்களைத் தாங்கி வழிநடத்துகிறார் என்றால் நீங்கள் விலையேறப்பெற்ற அதிர்ஷ்டசாலிகள் என்றே குறிப்பிடலாம்.

தேவ பிள்ளைகளே! தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருக்கக் கண்டு வெளிச்சத்தையும் இருளையும் உண்டாக்கி அவைகளை வேறுப்பிரித்து அதன் பின்பதாக விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளை உண்டாக்கி சகலவற்றையும் சிருஷ்டித்து இந்த உலகத்தை சிருஷ்டித்த பின்பதாகவே தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினால் உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அதன் பிறகு அவனுக்கு ஏற்றதுணையை ஏற்படுத்தினார். அவர்கள் மூலமாகவே இப்பூமியில் ஜனபெருக்கம் ஏற்பட்டது. இந் நாட்களில் பூமியின் ஜனத்தொகை 700 கோடிகளுக்கு மேற்பட்டதாயிருக்கிறது. இவர்கள் யாவரும் தேவனால் உருவாக்கப்பட்ட சாயலானவர்களே. இதைக் குறித்து நாம் சிந்திப்போமென்றால் நாம் எல்லோருக்கும் நம்முடைய படைப்பின் தேவனாகிய ஒரே ஆண்டவர் மாத்திரமே.ஆகவே அவர் மகா பரிசுத்தமானவர். மனிதன் பாவத்திற்கு அடிமையாகி தேவனுக்கு கீழ்ப்படியாமல் வாழ்ந்ததின் நிமித்தமாக மனிதனுடைய பாவங்கள் அக்கிரமங்கள் யாவையும் கழுவி சுத்திகரித்து மனிதர்களை வாழவைக்க வேண்டும் என்பதற்காகவே தன்னுடைய ஒரே குமாரனான இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து மனிதனை பாவ வாழ்க்கையிலிருந்து மீட்டுக் கொண்டார். அவருடைய இந்த மீட்பின் காரியத்தையும் அவர் உலகிற்கு வந்த சித்தத்தையும் அறிந்து அவரை ஏற்றுக்கொண்டவர்கள். ஜெயம் கொண்டவர்களாக திகழுந்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அவரைக் குறித்து அறிந்தும் அவருடைய அற்புத அடையாளங்களை கண்டு, பெற்றும் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அநேகர் உண்டு. தங்கள் மதக்கோட்பாட்டின் நிமித்தம் மதவைராக்கியத்தை பின் பற்றும் அநேகர். எம் மத்தியில் இருக்கிறார்கள். இவர்கள் தேவனை புறக்கணிக்கிறவர்களாகவும் வேத வார்த்தைகளை அசட்டை பண்ணுகிறவர்களாகவும் வாழ்கிறார்கள். சுவிஷேசத்தை அறிவிக்கும் கடமை எங்கள் மீது உள்ளது. லூக்கா 10:16ல் கிறிஸ்து இயேசுவை அசட்டை பண்ணுகிறவர்கள் அவரை அனுப்பிய கர்த்தரையே அசட்டை பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள். எனக் கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! எம் பாவங்களை நீக்கி சாபங்களை அகற்றி எங்கள் வாழ்க்கையை மாற்றி ஆசீர்வதிக்க கொடூர மரணத் தண்டணையை ஏற்றுக் கொண்ட எமது அன்புத் தகப்பன் இயேசுகிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக நாம் மாறவேண்டும். அவருடைய அழைப்பின் சத்தமான சுவிஷேசத்தை அநேக மனிதர்களுக்கு அறிவிப்போம். விடுதலையை காண முடியாதபடி அந்தகாரத்தில் வாழ்கின்ற அநேக ஜனங்கள் தேவனை விசுவாசிக்கும்படியாகவும் மெய் தெய்வத்தின் கிரியைகளை வெளிப்படுத்தி தேவனுடைய அற்புத கிரியைகளினால் அநேகருக்கு தேவ அன்பை பகிர்ந்துக் கொள்ளும்படியாகவும் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்வோம். அசட்டை பண்ணுகிறவர்களாவும் அவரை ஏற்றுக்கொண்டு நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படி பிராத்திப்போம். நாங்களும் உபவாசித்து ஜெபித்து பரிசுத்த ஆவியானவருடைய பரலோக வல்லமையைப் பெற்று பிணியாளிகளை சுகமாக்கி தேவனுடைய பரலோக ராஜ்யம் சமீபம் என்று அறிவிப்போம். கர்த்தர் எம்மோடிருந்து எம்மை பயன்படுத்த வல்லவராயிருக்கிறார். அசட்டை பண்ணுகிறவர்களும் அவருடைய மகிமையைக்காண ஜெபிப்போம். இன்றைய நாள் ஜெயத்தின் சுப நாள்!



என் மீட்பின் கன்மலையானவரே! எமக்கு கொடுத்த இந்த மீட்பை இன்னும் பலரும் பெற்றுக் கொள்ளும்படி தயை கூறுங்கள். உங்களை ஏற்றுக் கொள்ளாதபடி மேட்டிமையிலும், மாயைகளிலும் அகப்பட்டு உங்களை அசட்டை பண்ணுகிறவர்கள் மனம்மாறி உம்மை ஏற்றுக்கொள்பவர்களாக மாற அவர்களுக்காக விண்ணப்பம் செய்ய எங்களை ஜெப ஆவியால் நிரப்பும். ~ஆமென்~

---

நீங்கள் என்னைச் சிநேகித்து,
நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே
உங்களைச் சிநேகிக்கிறார். யோவான் 16:27

ஜீவ மன்னா
ஜூன் 24
திங்கள்

**சர்வ வல்லவருடைய அனுக்கிரகத்தோடு கூடிய பூரண கிருபையை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம் 17 - 18

**"கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது."** (அப்போஸ்தலர் 4:33)

உன்னதமான தேவனுடைய பிள்ளைகளே, அவரை நேசிக்கிறவர்களும் அவரால் நேசிக்கப்படுகிறவர்களுமான உங்களை இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். இப் புவியில் வாழ்ந்தாலும் எம் விசுவாசத்தின் மூலம் அவரைக் கண் கொண்டு தரிசிக்கிறவர்களாக இருந்தாலும் அரூபியாய் எம் மத்தியில் வாசம் செய்யும் சர்வ பராக்கிரமமுள்ள தேவனை அறிந்துக் கொள்ளும்படி அவருடைய அநுக்கிரகத்தை கிருபையை பெற்று மறுவாழ்வைக் குறித்து எதிர்ப்பார்ப்போடு இருக்கும் நீங்கள் அனைவரும் பாக்கியம் பெற்றோர். எமது சொந்த முயற்சியினால் அவரின் அநுக்கிரகத்தை பெற்றுக் கொள்ளவோ அவருடைய பிள்ளைகளாக உரிமையை பெற்றுக் கொள்ளவோ முடியாது.

தேவ பிள்ளைகளே, அவருடைய கிருபையுள்ள அநுக்கிரகத்தின் மூலமாய் இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்து கொண்ட நாங்கள் அவருக்கு சாட்சியாக வாழும்போது அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்த அப்போஸ்தலர்களுக்கு அவருடைய பூரண கிருபை உண்டாயிருந்தது போல் (அப்போஸ்தலர் 4:33 ) எமக்கு பூரண கிருபை உண்டாகும். ஆகையால் நீங்களும் தைரியமுள்ளவர்களாய் இருங்கள். உங்களைத் தெரிந்துக் கொண்டவர் சாதாரண வல்லமைக்கூடாக அல்ல. மகா வல்லமையாக கிரியை செய்கிறவர் என்பதை அப்போஸ்தலர் 5:16,17 தேவ வார்த்தைகள் தெளிவுப்படுத்துகிறது. அவருடைய சீடர்கள் பேதுரு நடந்து போகும் வழிகளிலே பிணியாளிகளை கட்டில்களின் மேலும் படுக்கைகளின் மேலும் அவர் நிழல்படும்படியாய் கிடத்தினார்கள். அனைவரும் சுகமடைந்தார்கள் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் குணப்பட்டார்கள். இப்படியான வல்லமையான காரியங்கள் சாதாரண மனிதர்களால் செய்ய முடியாது. ஆனால் தேவனுடைய மகா வல்லமையுடன் கூடிய அநுக்கிரகமும் ஆவியானவரின் உன்னத வல்லமை அவரில் இறங்கினபடியால் அவரின் மூலமாய் இச் செயல்கள் நிறைவேறியது. உங்களின் வல்லமை வெளிப்படும்படியாய் தேவ அநுக்கிரகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவனுடையவர்களே, அவர் உங்களையும் அளவில்லாமல் நேசிக்கிறார். உங்கள் மீது அவருடைய அநுக்கிரகத்தைப் பொழியும்படி காத்திருக்கிறார். இன்றைய நாட்களிலும் அநேக தோல்விகள் உங்கள் ஜீவிய பாதையில் கடந்து வந்த வண்ணமிருக்கலாம். உங்கள் உள்ளத்தின் துக்கத்துடன் கூடிய பிரச்சினைகள் உங்கள் எதிர்கால வாழ்வைக் குறித்து எதிர்பார்க்கவே முடியாத முற்றுப்புள்ளியான முடிவுகள் அலைமோதிக் கொண்டிருக்கிறதா ? ஏதேனும் நோய்களின் அடையாளம் தென்பட்டு நீங்காத நோய் பற்றிக்கொண்டது எனக் கலங்குகிறீர்களா? கவலைப்படாதீர்கள். நீங்கள் விசுவாசிக்கும் தேவன் உங்களை தனக்கு அருமையானவரென தெரிந்துக் கொண்ட சர்வ வல்லமைப் பொருந்திய ராஜாதி ராஜனாக இருக்கிறார். அவருடைய நாவின் ஒரு வார்த்தை சகலவற்றையும் ஒரு நொடியில் நீக்கி விடுதலையைக் கொடுக்கும். அவருடைய கிருபை சதாகாலங்களுக்கும் போதுமானது என விசுவாசியுங்கள். அவருடைய சமூகத்தில் காத்திருக்கும் போது தேவையான விமோசனத்தை விடுதலையை தருவார்.விசுவாசத்தோடு இரவு பகல் பாராமல் ஜெபியுங்கள். முறையிடுங்கள் விண்ணப்பியுங்கள் அவர் நீதியை நிலைநாட்டுவார். அவர் உடனடியாக பதில் தருவார். இன்றும் தேவனுடைய மகா அநுக்கிரகம் உங்களோடிருப்பதாக. இன்றும் ஜெயத்தின் நாள்.



என் பரலோக தகப்பனே! நீங்கள் மகா வல்லமையுள்ள தேவன் உங்கள் அநுக்கிரகத்தை பெறும் மனிதர்கள் பாக்கியம் பெற்றோர். நீங்கள் என்னை தெரிந்துத் தேவ அநுக்கிரகத்தால் நிரப்பி மற்றவர்கள் என்னில் தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளத் தக்கதாய் என்னையும் ஆசீர்வதித்தருளும். ~ஆமென்~

---

நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன்;
உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன்இல்லை;
நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 43:12

ஜீவ மன்னா

ஜூன் 25

செவ்வாய்

## உங்களை ஞானத்தின் ஆவியினால் சம்பூரணப்படுத்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


யாத்திராகமம் 19 - 20

**"மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்;"** (உபாகமம் 34:9)

தேவ அநுக்கிரகத்தினால் அன்பினால் இணைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, உதயமான இந்த புதிய நாளில் சகல சௌபாக்கியங்களோடு கூடிய வெற்றி சிறந்த நல்ல நாளை பெற்றுக் கொள்ளும்படி மரித்து உயிர்த்து ஜீவனுள்ளவராக இன்றும் கிரியை நடப்பிக்கிற ஜீவாதிபதி இயேசு கிறிஸ்துவின் மகிமையுள்ள நாமத்தினால் வாழ்த்துகிறேன். இன்றைய செய்தியின் ஆரம்பமான தேவ வார்த்தை நூனின் மகனாகிய யோசுவா மீது மோசே பரலோக பிதாவின் வாத்தையின்படி தனது கரங்களை வைத்த போது உடனடியாக அவர் ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டார் என்றும் மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான் என்றும் வேத வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவ ஞானம் என்றால் தேவனால் எமக்கு கொடுக்கப்படும் அதி விஷேசமான ஞானம். உலக ஞானத்தினால் அந்த தேவ ஞானத்தைக் குறித்து அறிந்துக் கொள்ள முடியாது. தேவனுடைய ஞானத்திற்கு முன்பாய் இந்த உலகத்தின் ஞானம் பைத்தியமாக இருக்கிறது என்று வசனம் கூறுகிறது. ஆயினும் தேவனைக் குறித்து அறியாத உலக ஜனங்களுக்கு முன்பாக தேவ ஞானம் என்பது மூடத்தனமான காரியமாக இருக்கிறது. தேவ ஞானத்தால் தேவனுடைய சித்தத்தால் செய்யப்படும் காரியங்கள் உலகிற்கு முன்பாய் அந்த மூடத்தனமாயிருந்தாலும் மூடத்தனமே உலகின் காணப்படும் அதிமேன்மையான ஞானத்தைப் பார்க்கிலும் மிக உன்னதமானது. உலகத்தின் சகல ஞானமும், அறிவும், கல்வி எல்லாமே தேவனுக்கும் தேவ ஞானத்திற்கு முன்பாக இரண்டாவது பட்சமே. ஆகையால் நீங்கள் மழு உள்ளத்தோடு தேவனை விசுவாசியுங்கள். உலக ஞானம் நீங்கள் மெய் தேவனை அறிந்துக் கொள்ளும்படி வழிகாட்டவில்லை. எனவே தேவ ஞானமே மெய் தேவனைக் குறித்து அறிந்துக் கொள்ளச் செய்தது. அவருடைய கிரியைகளை உணரச் செய்தது. அவரை பின்பற்றும்படியாக எம்மைத் தூண்டியது. ஆகையால் மனிதர்களுடைய வார்த்தைகளை நம்பி செவிகொடாது தேவ ஆவியால் நிரம்பி அவரின் பிரசன்னத்தில் தரித்திருந்து உங்களுடைய தெய்வீக ஞானத்தை அதிகரிக்கச் செய்து அதன்படி செய்யுங்கள். பரத்திலிருந்து ஞானம் இறங்கி வரும், உங்களை வழிநடத்தும்.

அன்புப் பிள்ளைகளே! சிருஷ்டிப்பின் தேவன் மகா ஞானமுள்ளவர் ஞானத்தின் பிறப்பிடமே எம் கர்த்தரே. அவரின் அந்த ஞானத்தின் ஒரு துளி கிடைக்கப் பெறுகிற மனுஷன் மகா பாக்கியவான். மனிதர்களின் மூளையின் உருவத்தை நீங்கள் படங்களில் கண்டிருப்பீர்கள். இவ்வளவு சிறிய மூளையைக் கொண்டு மனிதன் செய்யும் காரியங்கள் எவ்வளவாய் இருக்கிறது. மனிதனை படைத்து உயிரடையச் செய்து நாசியில் சுவாசத்தை வைத்து இப் பூமியில் பெருகும்படி செய்து சகலவற்றையும் ஆளுகை செய்து அனுபவிக்கும்படியாக ஆசீர்வதித்த சர்வ பராக்கிரம தேவனைக் குறித்து அறிந்துக் கொள்ள இந்த சிறிய மூளை எம்மாத்திரம்? உங்களை தேவனுக்கு விட்டுக் கொடுத்தீர்களென்றால் அவருடைய ஞானத்தினால் உங்களை நிரப்பி கர்த்தரைக் குறித்து அறிந்துக் கொள்ளக்கூடிய அறிவை கொடுத்து அவருடைய தெய்வீக ஞானத்தினால் உங்களை நிரப்பி உயர்ந்த அடைக்கலத்தில் உங்களை நிறுத்துவார்.இன்றும் ஒரு வெற்றியின் நாள்!



என் அன்புத் தந்தையே! உங்கள் தேவ ஆவியானவரின் நிமித்தமாக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். உங்களின் கருணையின் மூலமாக பரத்திலிருந்து உங்களுடைய ஞானத்தை பெற்றுக் கொள்ள தயை கூறுங்கள். என்னுடைய மூடத்தனமான காரியங்களை அகற்றி உங்கள் ஞானத்தினால் எம்மை நிரப்பி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன். ~ஆமென்~

---

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்,
யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும்
ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்,
அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். யாக்கோபு 1:5

ஜீவ மன்னா

ஜூன் 26

புதன்

## பலவீனர்களை பலவானாக மாற்றும் ஆவியானவர் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 21 - 22

**"உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக."** (யோவேல் 3:10)

எனக்கன்பான என் தேவனுடைய பிள்ளைகளே! எம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு ஒரு நல்ல நாள். உங்கள் சிந்தனைகளை தூரத்தில் இருந்தே அறிகிறவர் எமது தெய்வம். உலகில் விஞ்ஞானம் நவீனயுகத்தில் சகலவற்றிலும் பாரியளவில் பெரிய மாற்றத்தை உருவாக்கி எல்லாவற்றையும் தொழில்நுட்பத்தில் தலைசிரக்கப்பண்ணி வளர்ச்சியடைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆயினும் மனித உள்ளத்தின் சிந்தைனைகளைக் கண்டறிய, ஒரு மனுஷனுடைய இருதய சிந்தைனைகளை இன்னொருவர் கண்டறிய எந்த முறைகளோ இயந்திரங்களோ கண்டு பிடிக்கப்படவில்லை. மனிதனுடைய உள்ளத்தின் சிந்தைனைகளை தூரத்திலிருந்தே அறிகிற ஒரே கடவுள் எமது தேவன் ஒருவரே.

தேவ பிள்ளைகளே, பரிசுத்த வேதாகமத்தின் நீதிமொழிகள் 18:21ன் படி மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் என எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் எமது வாயிலிருந்து வார்த்தைகள் புறப்படும் முன் எமது இருதயத்தில் வார்த்தைகள் தோன்றும் போதே படைத்தவர் அதை அறிகிறார். நாங்கள் நினைத்த காரியத்தை வாயினால் அறிக்கை செய்யாவிட்டாலும் அதை கிரியையில் வெளிப்படுத்தாவிடினும் உள்ளான சிந்தைனைகளின் நினைவுகளை கூட தேவன் நியாயம் விசாரிக்கிரவராயிருக்கிறார். எம்மை குற்றவாளிகளாக நிற்கச் செய்வார். அவர் எமது யோசனைகளை சிந்தைனைகளை அறிகிறவர். ஆகையால் உங்கள் வாழ்க்கை பாதையில் நீங்கள் சந்திக்கும் எல்லாப் பிரச்சினைகள், சவால்கள் துக்கங்களின் மத்தியில் நீங்கள் முனுமுனுக்காது புலம்பாது கலக்கமடையாது விசுவாசத்தோடு தேவனை மாத்திரம் நம்பி முன்னோக்கிச் செல்லுங்கள். நடந்தவைகள் யாவற்றையும் கர்த்தர் அறிவார். இவையாவற்றிற் கூடாக என் வாழ்வில் தேவன் ஒரு மாற்றத்தை மறுமலர்ச்சியை உண்டு பண்ணுவார்,என நிச்சயத்தோடு எதிர்ப்பார்ப்போடு விசுவாசத்தோடு இருங்கள். நீஙகள் அவிசுவாசத்தோடு பின்மாற்றமடைவீர்களானால் உங்கள் வாழக்கையின் நிலை பின்தங்கிய போய்விடுகிறது. ஆகவே நீஙகள் விசுவாசிப்பீர்களேயானால் தேவனுடைய மகிமையை காண்பீர்கள் என்றும் விசுவாசிப்பவனால் யாவும் கூடும் என்றும் எமது அன்பு நேசரின் வாய்மொழிகளால் எமக்கு வாக்களித்திருக்கின்றார்.

மேலும் உங்கள் பிரச்சினை எதுவாகிலும் மலை போன்ற துன்பமாயினும், நீங்காத நோய், சாத்தானின் போராட்டம் சகலவற்றையும் மற்றவர்களிடம் சென்று கூற வேண்டாம். தேவனை முழு உள்ளத்தோடு விசுவாசித்து ஜெபித்து ஒப்புக் கொடுங்கள். தேவன் உங்களை தேற்ற ஆற்ற பலவீனத்தில் பெலனளிக்க உங்கள் அருகிலே இருக்கிறார். மற்றவர்களிடம் தெரிவிக்கும் போது அவர்களுடைய பரிதாபமான வார்ததைகள் தோல்வியை சுட்டிக் காட்டும் வார்த்தைகள் உங்களை சோர்வடைய விசுவாசக் குறைவுகளை உண்டுபண்ண வழிவகுக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டு உங்களை அதைரியப்படுத்தக் கூடும் இடைவிடாத ஜெபத்தோடு ஊக்கமான விண்ணப்பத்தோடும் ஆவியானவரோடு இணைந்து ஜெபிக்கும் போது தேவ வல்லமை உங்களை நிரப்பும். நீங்கள் ஆத்தும பெலத்தை பெற்று பலசாலியாகும் போது தேவ ஆசீர்வாதம் கடந்து வரும். மலை போல் கடந்து உங்கள் துன்பங்களை பணி போல் மாற்ற வல்லவராயிருக்கிறார். உங்களுக்கு இன்றைய நாள் ஒரு வெற்றியின் நல்ல நாள்.



என் தேவனே பலவீனனான என்னை அழைத்து உங்களுடைய தேவ ஆவியில் நிரப்பி என்னை பெலப்படுத்துகிறபடியால் நன்றி. ஆயினும் தகப்பனே அடிக்கடி சாத்தான் கொண்டு வரும் போராட்டத்தின் போது எங்கள் விசுவாசத்தை சீர்குலைக்கும் சிந்தைகளிலிருந்து என்னை மீட்டருளும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்~

---

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். அப்போஸ்தலர் 1:8

ஜீவ மன்னா
ஜூன் 27
வியாழன்

**வனாந்தரத்தை தண்ணீர் தடாகமாகவும் வறண்ட நிலத்தை நீர்க் கேணியுமாக மாற்ற வல்ல தேவன் !**

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம்
23 - 24

**“உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து, வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கி,”** (ஏசாயா 41:18)

மலருகின்ற அந்தக் காலைப் பொழுதினிலே மலரும் இன்றைய நாளின் காலைப் பொழுதினிலே அவருடைய ஜனங்களாகிய நாங்கள் அனைவரும் அவருடைய புதிய கிருபையை பெற்று அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்கும் சலாக்கியத்தை பெற்றவாகளாய் இருப்பது நன்மையான காரியமாக இருக்கிறது. அன்பார்ந்தவர்களே அநேக அலுவல்கள் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானமாக இன்று இருக்கலாம். ஏதாவது பொருத்தனையை நிறைவேற்றப்பட வேண்டிய நாளாகவும் இருக்கலாம் உங்களால் செய்ய முடியாதிருந்தாலும் கட்டாயமாக செய்து முடிக்க வேண்டிய வேலையோ கடமையோ உங்களை நோக்கிக் கொண்டிருக்கலாம். அதிகாலையில் எழுந்தவுடன் அதிக வேளைகளின் நிமித்தம் உங்கள் உள்ளம் சோர்வடைந்திருக்கலாம். உங்கள் இருதயத்தை கலங்க வைக்கும் காரியமாக இருக்கலாம். இவைகளெல்லாம் சத்துருவானவன் கொண்டுவருகின்ற அக்கினி அஸ்த்திரங்களாக உங்களை நோக்கி வந்து உங்கள் உள்ளத்தை வேதனைப்படுத்தக் கூடும். ஆயினும் மனங் கலங்காதிருங்கள்.

தேவனுடைய பிள்ளைகளே உங்களோடிருக்கிறவர் சாவபராக்கிரமுள்ளவர் அவரால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. அவர் மாம்சமான யாவரினதும் தெய்வம். என்னால் கூடாத காரியம் ஒன்றுண்டோ என்று சொன்னது நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸது மாத்திரமே எம்மால் முடியாத காரியம் அநேகம் உண்டு ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை அவருடைய ஜனங்களாகிய நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். எமது எல்லாக் காரியங்களிலும் அவர் அக்கறையுள்ளவர். ஆத்மீக வாழ்விலே மாத்திரமல்ல எமது அனுதின ஜீவியத்திலேயும் அவர் கவனம் செலுத்துகிறார். எம்மால் நிறைவேற்றக்கடினமானவைகள், பதில் பெற முடியாதவைகள். தகுந்த நீதி கிடையாமை, நிறைவேற்றப்பட வேண்டிய பொருத்தனைகள் கட்டாயமாக செய்ய வேண்டிய காரியங்கள் என்பவைகளை திறமையாக செய்து முடிக்க எம்மை பெலப்படுத்தி ஒத்தாசை வழங்கி அவையெல்லாவற்றையும் மாற்றி அமைக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். ஆகையால் நாம் கலக்கமடையாதபடி எம் கடமைகளை நேர்த்தியாக நிறைவேற்ற முயற்சிக்கும் போது. தேவன் சகலவற்றையும் செய்து முடிக்க தேவ அனுகூலத்தை எமக்கு தந்தருளுவார்.சாத்தானுடைய தந்திரமான உபாயங்களுக்கு சிக்கி அகப்பட்டு விடாதபடி எதைக் குறித்தும் கவலைப்படாமல் எல்லாக் காரியங்களையும் ஜெபத்துடன் அவரிடம் கையளிக்கும் போது அவர் எமக்காக யாவையும் செய்து முடிப்பார்.

தேவ பிள்ளைகளே மேலே கொடுக்கப்பட்ட வேத வசனம் ஏசாயா 41:8 கர்த்தரின் கிரியைகளை தெளிவுப்படுத்துகிறது. வனாந்தரத்தை தண்ணீர் தடாகமாகவும் வறண்ட நிலத்தை நீர்க்கேனிகளுமாக்குவேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வனாந்தரம் வறண்ட நிலம் என்ன எனபதை நீங்கள் அறிவீர்கள். அங்கே நீர்த் தடாகமோ நீர்க்கேணிகளோ அமைக்க மனிதாகளால் முடியாது ஆயினும் யாவற்றையும் உருவாக்கும் தெய்வத்தால் மாத்திரம் இது முடியும் உங்கள் எதிர்க்காலத்தை குறித்தோ அன்றாட காரியங்களைக் குறித்தோ எண்ணித் திகையாதீர்கள் அவரிடம் சமர்ப்பிக்கப்படும் சகல காரியங்களையும் அவர் தமது வல்லமையான கரங்களை நீட்டி யாவற்றையும் எமக்காக செய்து முடிப்பார்.



எனது நேசத் தகப்பனே நீங்கள் மிகவும் நல்லவர். அப்பா வனாந்தரத்தில் தண்ணீர் தடாகத்தையும் வறண்ட பூமியை நீர்த் தடாகமாகவும் மாற்றுகிறவரே உங்களால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை என் வாழ்வை உம்மிடம் ஒப்படைக்கிறேன். என்னுடைய சகல தேவைகளையும் சம்பூரணப்படுத்தி ஆசீர்வதிக்க வேண்டுமென பிரார்த்திக்கினறேன். ~ஆமென்~

---

அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை. எரேமியா 31:12

ஜீவ மன்னா

ஜூன் 28

வெள்ளி

# அமைதியாய் காத்திருந்து தேவ ஆறுதலை பெறுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 25 - 26

**“நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்;...”**
(சங்கீதம் 46:10)

தேவ கிருபையால் கிடைக்கப்பெற்ற பாசமிக்க என் தேவ பிள்ளைகளே வல்லமையும் இனிமையும் நிறைந்த இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் சமாதானமும் மகிழ்ச்சியும் நிறைந்த அன்பின் ஆசீர்வாதங்கள் கடந்து வரும்படி வாழ்த்துகிறேன். தேவன் எங்கள் ஆத்துமாவைக் குறித்து மிகவும் கரிசனை உள்ளவராய் இருக்கிறார். அநாதி அன்பினால் மிக விஷேசித்த கிருபையை பொழியும் சர்வ பராக்கிரமமுள்ள எமது பரலோக தந்தையைக் குறித்து யார் என அறிந்து அவருடைய சொந்த பிள்ளையாக இருந்து அவருடைய மகிமையின் கீரீடத்தை பெறும் வரப்பிரசாதத்தை பெற்றவர்கள் பேறுபெற்றவர்கள்.

தேவ பிள்ளைகளே, சங்கீதம் 46:10லே ஆவிக்குரிய பிள்ளைகளாகிய எங்களுக்கு எத்தகைய குழப்பமான சூழ்நிலையாக இருப்பினும் எவ்வகையான கலக்கத்தை உண்டுபண்ணுகிற நிலையில் இருந்தாலும். கோபத்தை பயத்தை ஏற்படுத்தினாலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துக் கொள்ளுங்கள் என தேவனுடைய வார்த்தை கூறிய பொழுதிலும் அநேக தேவ பிள்ளைகள் அநேக சந்தர்ப்பங்களில் குழப்பத்துடன் கலக்கத்துடன் செயல்படுகிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட சஞ்சலம், விபத்து, வியாதி,பொருளாதார பிரச்சினை, சாத்தானின் போராட்டம் இவ்வாறான சோதனைகள் போராட்டங்கள் சூழ்ந்துக் கொள்ளும் வேளையில் மனக் கலக்கமடைந்து உடனே தொலைபேசியின் மூலமாக ஐயோ எனக்கு இப்படி நடந்துவிட்டதே என்று மனதை சஞ்சலப்படுத்திக்கொண்டு குழப்பத்துடன் எனக்காக ஜெபியுங்கள் என புலம்பும் அநேக தேவ பிள்ளைகளை நாம் காண்கிறோம். ஆயினும் இப்படியான எச் சூழ்நிலையானாலும் சர்வ பராக்கிரமமுள்ள சிருஷ்டிகருடைய உரிமையுள்ள பிள்ளைகளாக நாம் இருக்கிறபடியால் கலங்கித் தவிக்காது அமைதியாக விசுவாசத்தில் உறுதியாக தரித்திருங்கள். நீங்கள் குழம்பிப் போவதால் எதையும் சாதிக்க முடியாது. உங்கள் உள்ளம் கலக்கமடைந்தால் ஒரு சரியான தீர்மானம் எடுக்க செயல்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நழுவிப் போய்விடும். நீங்கள் எடுக்கும் திடீர் தீர்மானங்கள் மூலம் பயங்கர விளைவுகளை கொண்டுவரக்கூடும் ஆகையால் சோர்வடைந்து மனக் கலக்கமடையாதீர்கள். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

தேவனுடைய பிள்ளைகளே, ஆண்டவருடைய வார்த்தைகள் யாவும் உண்மையுள்ளது. நிறைவேறுகிறதாய் இருக்கிறது. அதேபோல் சங்கீதம் 46:10 வார்த்தையும் சத்தியவசனமாகும். ஆயினும் கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த பெரிய நன்மையான காரியங்களை நினைத்து சிந்திக்காது அவரை மறந்து சுயபெலத்தில் செயல்படும் வேளைகளில் அவருடைய கிருபை எத்தகையது என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்தும்படியாக நீங்கள் இப்படியொரு காரியத்தை நடக்க இடம் கொடாதிருங்கள். அவருடைய சொந்த விருப்பத்திற்கு மாறாக சிறிது நாட்களுக்கு உங்களுக்கு நன்மைக்கேதுவாக அமையும் வண்ணமாக சஞ்சலங்களுக்கும் சோதனைகளுக்கும் உங்களை அனுமதிக்க கூடும். ஆனாலும் நீங்களே உங்களை சோதித்தரிந்து தவறுகள், பிழைகள், உங்களுடைய சுயசித்தங்கள் இருந்தால் அவையெல்லாவற்றையும் விட்டு விட்டு தேவபாதத்தில் ஜெபத்தோடு அமர்ந்திருங்கள். தேவனுடைய செயல்களைக் குறித்து மகிமைப்படுத்துங்கள். எல்லா துன்பங்களும் பிரச்சினைகளும் சம்பூரணமாக நீங்கும் வரைக்கும் சகலமும் சீர்படும்வரை அவர் சமூகத்தில் அமர்ந்திருந்து அவரே தேவனென்று அறிந்துக் கொள்ளுங்கள் விசுவாசத்தோடு அமைதியாயிருந்து வல்லமையான பதிலை பெற்றுக் கொள்ளுங்கள். இன்று உங்களுக்கு வெற்றியின் இனிய நாள்.



என் அன்புத் தகப்பனே! சர்வவல்லமையுள்ள தேவனே! உங்கள் சொந்த பிள்ளையாக என்னை மாற்றின கிருபைக்காக ஸ்தோத்திரம். என் உள்ளத்தை கலங்கச் செய்கிற எல்லாவேளைகளிலும் நீங்கள் உங்கள் கிருபையால் தாங்க தேவனே சகல வேளைகளிலும் அமைதியை கடைப்பிடித்து வெற்றியை பெற்றுக் கொள்ள கிருபை தாருங்கள் இயேசுவின் நாமத்தில் ~ஆமென்~

---

கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்;
கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார். ஏசாயா 26:4

ஜீவ மன்னா

ஜூன் 29

சனி

# குயவன் கையில் களிமண்ணாக எம்மை அனுதினம் வனையும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் 27 - 28

**"இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்."** (எரேமியா 18:6)

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! ஜீவனுள்ள ஒரே தேவன் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திற் கூடாக இன்று உங்களுக்கு சகல ஆசீர்வாதங்களோடு கூடிய நல்ல நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன். நீங்கள் ஆராதிக்கும் கர்த்தர் உங்கள் வாழ்வுக்கு தேவையான சகல காரியங்களைக் குறித்து அருமையான திட்டங்களை ஆயத்தப்படுத்தி வைத்துள்ளார். ஆகையால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். உங்கள் எதிர்காலத்தை குறித்தும், எதிர்கால சந்ததிகளைக் குறித்தும் எல்லாம் திட்டப்படுத்தி வைத்துள்ளார். நீங்கள் தாயின் கருவில் இருக்கும் போதே உங்களைத் தெரிந்துக்கொண்டு உங்கள் வாழ்நாள் முழுவதையும் திட்டமிட்டு செயல் படுத்துகிறவராக இருக்கிறபடியால் கலங்காதிருங்கள்.

பிள்ளைகளே! நீங்கள் எப்போதும் உங்களைக் குறித்து உயர்வாக எண்ணுங்கள். நீங்கள் பரலோக தகப்பனுடைய சொந்தப்பிள்ளை என்பதை எந்நேரமும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் வாழ்வில் இரண்டொரு தோல்விகளை சந்தித்தவுடனே நிலைக்குலைந்து போய் விடாதீர்கள். முழு வாழ்வே தோல்வியாகி விட்டதாக எண்ணாதிருங்கள். நீங்கள் காணும் தோல்விகள் மூலம் மென் மேலும் உங்களைப் பெலப்படுத்திக் கொள்ளுங்கள். தோல்விகள் எதிர்கால வெற்றிக்கு வழிவகுத்துள்ளது. எதிர்காலத்தில் தோல்விகளைச் சந்திக்காதபடி வெற்றியின் பாதையில் நடக்க அநேக அனுபவங்களை இக் காரியத்திற் கூடாக நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் தோல்விகளை நன்மைக்கேதுவாக மாற்ற எங்கள் தேவன் உங்களோடிருக்கிறார். ஆகையால் வாழ்வில் நடந்து முடிந்த தோல்விகளையே நித்தமும் எண்ணி கவலைப்படாமல் துயரமடையாது எல்லாவற்றையும் உதறிதள்ளி விட்டு, திடங் கொண்டு விசுவாசத்தோடு புதிய நாளை ஆரம்பியுங்கள். முடிந்து போன தோல்விகள் முற்றுபெற்று உங்கள் எதிரிலே மாபெரும் வெற்றிக்குரிய வாசல்கள் திறக்கப்படும்.

தேவனுடைய பிள்ளைகளே! எமது ஆரம்ப வசனம் எரேமியா 18:6ன்படி குயவன் கையில் இருக்கும் களிமண் போல் நாங்கள் தேவ கரங்களில் இருக்கிறோம் என்று அதே அதிகாரத்தின் 3,4ம் வசனங்கள் கூறுகிறது. குயவன் வனைந்துக் கொண்ட மட்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று. அப்பொழுது குயவன் அதைத் திருத்தமாக நேர்த்தியாக தன் பார்வைக்கு உகந்ததாக வேறே பாண்டமாக வனைந்தான். நீங்கள் தேவனை ஏற்றுக் கொண்டு அநேக வருடங்கள் கடந்திருந்தாலும், அல்லது புதிய விசுவாசியாக இருந்தாலும் தேவனுடைய கரத்தில் உங்கள் வாழ்வை ஒப்புவித்து அவருடைய சித்தத்திற்கு காத்திருப்பவர்களாயின், உங்களுக்கு என்ன கலக்கம் ஏற்பட்டாலும், பிழைகள்,தவறுகள் செய்தாலும் நீங்கள் சோதனைகளை, தோல்விகளைச் சந்தித்தாலும் பாதகமான விளைவுகளுக்கு முகங் கொடுக்க நேர்ந்தாலும் வழிதவறி போயிருந்தாலும், தூரமாகியிருந்தாலும் தேவனை நோக்கி மனங்கசந்து மனந்திரும்பி திரும்பவும் தேவனின் பட்சத்துக்கு உள்ளத்தை ஒரு மனப்படுத்தி அவருக்குள் மனந்திரும்பும் போது அவர் உங்களை மன்னித்து தம் கரங்களில் ஏந்தி திரிகையிலே திரும்பவும் ஒரு புதிய பாத்திரமாக மாற்றுவார். உங்கள் வாழ்க்கையை அவர் கரத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.அவர் உங்களை அழகாக புடமிட்டு யாவருக்கும் பிரயோஜனபடத்தக்கதாக உகந்த பாத்திரமாக வனைந்து உங்கள் வாழ்க்கையை சுடர் விட்டு பிரகாசிக்கச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார்.



**என் தேவனே குயவனான உம் கரத்தில் என்னை ஒப்படைக்கிறேன். என்னை உமக்கு உகந்த பாத்திரமாக என்னை வனைந்து இன்னும் அநேகருக்கு பிரயோஜனமான பாத்திரமாகவும். வாழ்க்கையில் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்து வல்லமை பொருந்திய பாத்திரமாக வனைந்து என்னை ஆசீர்வதித்தருளும். –ஆமென்–**

---

சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே,
இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து,
நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி, ஏசாயா 54:11

ஜீவ மன்னா

ஜூன் 30

ஞாயிறு

**உங்களுடைய ஆத்துமா உங்களுக்கு ஜீவனை பெற்றுத் தரும் !**

இன்றைய வேதவாசிப்பு


யாத்திராகமம் 29 - 30

**"அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார்."** (லூக்கா 8:55)

நேசமிக்க தேவனுடைய அன்பு தேவ பிள்ளைகளே! இன்றும் என் இதயப்பூர்வமான நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இயேசுகிறிஸ்துவை தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசத்தோடு பின்பற்றும் கிறிஸ்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் பாவத்தினாலே மரித்துப் போய் கிடந்த எங்கள் ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டதன் நிமித்தமாக அவருடைய சரீரத்திலிருந்து வழிந்தோடிய திரு இரத்தம் மனித பாவங்களை நீக்கும். அந்த தூய இரத்தமானது எம் பாவ சாபங்களை மாற்றி, நீக்கி தூய்மைப்படுத்தி பரிசுத்த வாழ்வைத் தந்தது. பாவத்தால் மரித்துப் போன எமது ஆத்துமா, புத்துயிருள்ள ஜீவனைப் பெற்றுக் கொண்ட ஆத்துமாவாக இருக்கின்றபடியால், எத்தனை மாபெரும் பாக்கியமாக இருக்கின்றதல்லவா?

ஜீவ மன்னா வாசகர்களே, இன்று தான் நீங்கள் முதல் முறையாக இந்த ஜீவ மன்னா தின இதழை வாசிக்கிறீர்களா? இன்று தான் தேவ வார்த்தைகளை முதன் முதலாக வசிக்கின்றவராக இருந்தால் உங்கள் உள்ளத்தில் நான் இயேசுவை குறித்து அறியேன். "இயேசு என் பாவங்களின் நிமித்தம் எனக்காகவே மரித்தார் என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அவருடைய இரத்தம் என் பாவங்களிலிருந்து என்னை சுத்திகரிக்கும் என்பதை நான் விசுவாசிக்கவில்லை. ஆனாலும் நான் உயிரோடு தானே இருக்கிறேன்," என்கிறீர்களா? நீங்கள் இவ்வாறு எண்ணக் கூடும். ஆயினும் உங்களால் உங்கள் ஆத்துமாவைக் உங்களால் காணக் கூடுமா? அல்லது உங்கள் சரீரத்தின் உள்ளே இருக்கும் உயிரைக் காண முடியுமா? அதே போல் ஆத்துமாவும் உயிரும் ஒன்றோடு ஒன்று கலந்துள்ளது என்பது உங்களுக்கு தெரியுமா? வேதாகமத்தின் யாக்கோபு 2:26 உரைக்கிறது ஆவியில்லாத சரீரம் மரித்ததாயிருக்கிறது, என்று இதன் கருத்து உங்கள் சரீரத்தில் இருந்து ஆத்துமா பிரியும் போது உயிரும் பிரிந்து விடும் என்பதே. ஆகையால் உங்கள் பாவத்தின் நிமித்தம் உங்கள் ஆத்துமா மரித்துப் போயிருந்தால் உங்கள் சரீரமும் மரித்ததாயிருக்கும். ஆயினும் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.

தேவ பிள்ளைகளே! ஆரம்ப வேத வசனம் சொல்கிறது. "அவள் உயிர் திரும்ப வந்தது. உடனே அவள் எழுந்திருந்தாள்." அதாவது அவளுடைய ஆத்துமா சரீரத்தை விட்டு வெளியேறியவுடன் அவளுடைய ஆத்துமா திரும்பவும் உடலுக்குள் சென்றதும் உயிரும் உட்புகுந்து ஜீவன் பெற்று எழும்பச் செய்தது. உங்களுக்குள் ஜென்ம பாவம் இல்லாவிடின் ஆத்துமாவும் ஜீவனும் ஒன்றோடு ஒன்று கலந்து இருப்பதால் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள், வியாதிகள், துன்பங்கள் போன்றவற்றால் ஆத்துமா சோர்வுற்று போகும் போது பினமாற்றமடையும் போது உங்கள் வாழ்க்கையில் செயல்படாதபோது உங்கள் உடலும் உள்ளமும் சோர்வுற்று போகிறதல்லவா? அவ் வேளையில் தேவன் சகலவற்றையும் சந்தித்து உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்தும் போது ஜீவன் உங்களுக்குள் இறங்குகிறதல்லவா? நீங்கள் திரும்பவும் உயிரைடைந்து எழும்புகிறீர்கள் அல்லவா? அதே போல் ஜீவன் பெலன் உங்கள் வாழ்க்கையில் கடந்து வர தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இன்றைய நாள் ஜெயத்தின் நாள்.



என் நேசத் தகப்பனே பரிசுத்த ஆவியானவரே உமக்கு நன்றி. ஆவியானவரே எமக்கு புதிய ஜீவனைக் கொடுத்து எம்மை பெலப்படுத்தும். நித்தமும் என் ஆத்துமாவை பெலப்படுத்தி உமது அன்பின் வழியலே என்னை வழிநடத்தியருளும் என் ஆத்துமா வாழ்கிறது போல நான் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி என்னை ஆசீர்வதித்தருளும்.~ஆமென்~

---

ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள்,
உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.
கொலோசெயர் 3:3

# எங்களுடைய தேவ சபையின் ஜெப நேரங்கள்



## பொதுவான ஜெபங்கள்

* திங்கள் முதல் வெள்ளி வரை ஞாயிறு தினங்களில்.
  * அதிகாலை 04.00 மணி முதல் 06.00 மணி வரை ஊழியர்கள் ஜெபம்.
* திங்கள் செவ்வாய் வியாழன் தினங்களில்.
  * காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை முழு நேர ஊழியர்களின் ஜெபம்.
* திங்கள் செவ்வாய் வியாழன் தினங்களில்.
  * மாலை 02.00 மணி முதல் 04.00 மணி வரை முழு நேர ஊழியர்கள் விசுவாசிகள் இணைந்து ஜெபம்.
* திங்கள் முதல் வியாழன் வரையிலும் சனி ஞாயிறு தினங்களில்
  * இரவு 07.30 மணி முதல் 08.30மணி வரை தேவன் பெற்றுக்கொடுத்த அநுக்கிரத்திற்காக நன்றி பலி ஜெபம்.


## விஷேச ஜெபங்கள்

* திங்கள் கிழமை விஷேச ஜெபம்.
  * காலை 09.00 மணி முதல் காலை 10.00 மணி வரை தேவன் செய்த நன்மைகள் நிமித்தம் ஸ்தோத்திர பலி ஜெபம்.
  * காலை 10.00 மணி முதல் மாலை 02.00 மணி வரை ஒவ்வொரு குடும்பமாக குடும்ப ஜெபம்.
* செவ்வாய்க் கிழமை விஷேச ஜெபம்.
  * காலை 09.00 மணி முதல் 02.00 மணி வரை இலங்கை வாலிபர்களுக்காக சபையில் வாலிப ஜெபம்.
  * மாலை 05.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை சபை போதகரின் குடும்ப ஜெபம்.
  * ஒவ்வொரு மாதமும் ஒரு செவ்வாய்க்கழமை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை முழு நேர ஊழியர்களின் விஷேச ஜெபம்.
* புதன் வெள்ளி தினங்களில் விஷேச ஜெபம்.
  * காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தேசத்தில் ஆத்துமாக்களின் விடுதலைக்காக தண்ணீர் அருந்தாத உபவாச ஜெபம்.
* வியாழன் தினங்களில் விஷேச ஜெபம்.
  * காலை 09.00 மணி முதல் 02.00 மணி வரை விசுவாசிகளின் குடும்பங்கள் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனி குடும்ப ஜெபம்.
* வெள்ளிக்கிழமை விஷேச ஜெபம்.
  * இரவு 09.00 மணி முதல் அதிகாலை 01.00 மணி வரை சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனை வல்லமையாக நடைபெற ஜெபம்
  * ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை காலை 06.00 மணி முதல் 24 மணித்தியாலங்கள் உபவாச ஜெபத்தோடு இராவிழிப்பு ஜெபம்.
* சனிக்கிழமை தினங்களில் விஷேச ஜெபம்.
  * காலை 8.00 மணி முதல் காலை 09.30 வரை சுகமளிக்கும் ஆராதனைக்காக ஊழியர்கள் இணைந்து ஒரு மன ஜெபம்
* ஞாயிறு தினங்களில் விஷேச ஜெபம்.
  * காலை 09.00 மணி முதல் காலை 10.00 மணி வரை துதி நமஸ்கார ஆராதனைக்காக ஜெபம்.

## மேலதிகமான விஷேச ஜெபங்கள்.

* ஒவ்வொரு மாதமும் போயா தினங்களிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் காலை 09.00 மணி முதல் 04.00 மணி வரை உபவாச ஜெபம்.
* வெளி மாவட்டங்களில் சுவிஷே கூட்டங்கள் நிமித்தம் 21 நாட்கள் உபவாச ஜெபம்.

"நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்;
அக்காலமுதற்கொண்டு நான் அதை உனக்கு
விளங்கப்பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ?
இதற்கு நீங்களே என் சாட்சிகள்;
என்னைத்தவிரத் தேவனுண்டோ?..."



ஏசாயா 44:8

# இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக !!!

## 21 வது வெளியீடு

தேவ பிள்ளைகளே,

ஜீவ மன்னா '21 வெளியீடு' வரை எம்மை முன்னோக்கி வழி நடத்திய எங்கள் தேவனுக்கு மகிமை உண்டாவதாக! எமக்கு ஒத்தாசை செய்த வாசகர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். பரிசுத்த வேதாகமத்தில் லூக்கா 18:8ன் வசனத்தின்படி "...மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கின்றார். ஆகையால் அவ்வசனம் நிறைவேறும் வகையிலே ஆவிக்குரிய ராஜ்ஜியத்தில் எதிர்காலத்தில் நடக்கப் போகின்ற சில காரணங்களையும் காரியங்களையும் ஆராய்ந்து அறிகின்றோம். அனைத்திற்கும் அதிகமாக இயேசுகிறிஸ்து வெளிப்படுத்திய மேற்கூறப்பட்ட வசனம் என் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஆவிக்குரிய தேவ பிள்ளைகளுக்குள் தேவனைக் குறித்து விசுவாசம் மென்மேலும் அதிகரிக்கச் செய்யும்படியாக தேவனுடைய அநுக்கிரகத்தால் உங்கள் கையில் கிடைக்கும் இந்த ஜீவ மன்னா தினதியானங்கள் சம்பந்தமாக வாசகர்களாகிய உங்கள் கருத்துக்கள், யோசனைகள் இருப்பின் அவைகளை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவைகளை நாம் வரவேற்பதுடன் எமக்கு முன்னோக்கிச் செல்லக் கொடுக்கும் பெலனாகக் கருதுகின்றோம்.

"நற்செய்தி" அறிவிக்கத் தேவைப்படும் கைப்பிரதிகள், நற்செய்தி CD தட்டு அவைகளைத் தவிர புதிய ஆலோசனைகளை கர்த்தர் வெளிப்படுத்தினால் அவைகளை எமக்கு அறிவியுங்கள். அவைகள் தகுதியான ஆலோசனைகள், கருத்துக்கள் என்றால் அதை உடனடியாக நடைமுறைப்படுத்துவோம், வெளி நாட்டில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இந்த ஜீவ மன்னாவை அறிமுகப்படுத்துங்கள். அவர்களது முகவரிகளை எங்களுக்குக் கிடைக்கச் செய்வீர்களாயின் அவர்களுக்கும் தபால் மூலமாக "ஜீவ மன்னாவை" அனுப்புவோம். இப்பூமியில் விசுவாச வளர்ச்சியை அதிகரிக்கும்படியாக நாங்கள் செயல்படுகின்ற வேகத்திற்கு உங்கள் ஒத்துழைப்பு அதிகமாக கிடைக்க வேண்டுகிறோம். "உங்கள் அனைவருக்கும் நல்ல எதிர்காலம் உருவாக வேண்டுமென" இயேசுவின் நாமத்தில் பிரார்த்திக்கின்றேன்.

மகிமையான தேவனே! உங்களுக்கு மகிமையுண்டாவதாக!

போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவு இலக்கம்:- CME/003/12/NPO

**இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்**
இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.
011-2334865 0714-922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல 33/1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நியூஸ் பிரின்டர்ஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.